விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 291 வள்ளுவர் ஆண்டு 2054 புரட்டாதி 19 வெள்ளிக்கிழமை (06.10.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## யாழ். - சென்னை கப்பல் சேவை ஓரிரு வாரங்களில் ஆரம்பமாகும்

### இந்திய உயர்ஸ்தானிகர் அறிவித்ததாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவிப்பு



(கொழும்பு)

யாழ்ப்பாணத்துக்கும் சென்னைக்கும் இடையிலான கப்பல் சேவையை ஓரிரு வாரங்களில் ஆரம்பிக்க முடியும் என இந்திய உயர்ஸ்தானிகர் தன்னிடம் அறிவித்ததாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா பாராளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் 15

## மாணவர்களிடையே ஹெரோயின் போதை பாவனை அதிகரிப்பு

(கொழும்பு)

15 முதல் 18 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களிடையே ஹெரோயின் போதைப் பொருள் பாவனை அதிகரித்துள்ளதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஹெரோயின் போதைப்பொருள் மற்றும் ஏனைய போதைப்பொருள் பாவனைக்கு பாடசாலை மாணவர்கள் பலியாகிவருவது மிகவும் 15

### வரி உயர்த்தப்படவுள்ளதால்

## பொருட்களின் விலை அதிகரிக்கப்படலாம்

### மத்திய வங்கி ஆளுநர்

(கொழும்பு)

நிதியமைச்சு சில வரிகளை அதிகரிக்கலாம் என்பதால் சில பொருட்களின் விலைகளும் அதிகரிக்கலாம் என மத்திய வங்கி ஆளுநர் தெரிவித்துள்ளார்.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கை குறித்த ஆய்வு ஒக்ரோபர் மாதத்திற்குள் முடிவடையும் என எதிர்பார்ப்பதாக தெரிவித் 15

### முல்லை நீதிபதி விவகாரம்

# வட கிழக்கில் ஹர்த்தால்?

### விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதி கோரி வடக்கு - கிழக்கில் ஹர்த்தால் நடவடிக்கையை முன்னெடுக்க ஆராயப்பட்டுள்ளது.

இது தொடர்பில் விரைவில் உத்தியோகபூர்வ அறிவிப்புகள் வெளியாகவுள்ளன.

(15ஆம் பக்கம் பார்க்க)

## ஜனாதிபதி ரணிலின் சீன விஜயத்தின் பின்

### சீன ஆராய்ச்சி கப்பலுக்கு அனுமதி?

(கொழும்பு)

சீன ஆராய்ச்சிக் கப்பல் இலங்கை துறைமுகங்களுக்கு வர அனுமதிப்பது குறித்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின் பின்னர், தீர்மானிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீனா ஆய்வுக் கப்பல் எதிர்வரும் 25ஆம் திகதி கொழும்புக்குவரும் என முன்னர் அறிவிக்கப்பட்டி 15

### முல்லைத்தீவு நீதிபதிக்கு நீதிகோரி

## மனித உரிமை ஆணைக்குழு முன்பாக யாழில் இன்று கவனயீர்ப்பு

(யாழ்ப்பாணம்)

முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு நீதிகோரி யாழ்ப்பாணம் மனித உரிமை ஆணைக்குழுவுக்கு முன்பாக இன்று கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

சட்டத்துக்கும் மனித உரிமைக்குமான நிலையத்தின் ஏற்பாட்டில் முல்லைத்தீவு மாவட்ட நீதிபதி சரவணராஜாவுக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு குரல் கொடுக்கும் முகமாக இன்று 15

### ஜனநாயகத்தில் கைவைக்க வேண்டாம்

## உயர் நீதிமன்றத்துக்கு முன் சட்டத்தரணிகள் கவனயீர்ப்பு



15

## ஜனாதிபதி ரணில் சீனா பயணம்

(கொழும்பு)

பெல்ட் அன்ட் றோட் (Belt and Road) முயற்சியின் 10வது ஆண்டு 15

## நீதி இல்லாத இலங்கைக்கு எதற்கு நிதி வழங்க வேண்டும்

### ஐ.நாவில் கஜேந்திரகுமார் கேள்வி



(ஜெனிவா)

உடைந்த நீதி நிர்வாக முறைமை கொண்ட இலங்கையைப் போன்ற ஒரு நாட்டுக்கு நிதியளிப்பது நிறுவனமயப்பட்ட அநீதியை நிலைநாட்டுவதாகவே அமையும் என்று தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் பாராளுமன்ற 02

## கொழும்பில் வெடிகுண்டு எச்சரிக்கை

(கொழும்பு)

கொழும்பின்பல இடங்களை இலக்கு வைத்து எதிர்வரும் சில நாட்களில் தொடர் குண்டுத் தாக்குதல்கள் நடத்தப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டதாக 15




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரவெட்டி விக்னேஸ்வரக் கல்லூரியில் வாண்மை விருத்தியால் சிறப்படைந்த கல்வியியலாளர்களைப்

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

Congratulations!



கல்வியியல் முதுமாணி
திரு.மகாதேவன் அசோக்குமார் SLTS 2 - I
Dip.in.Teaching(Maths), B.Ed.,M.Ed.



கல்விமாணி
திருமதி.சிவானந்தி பாஸ்கரன் SLTS 2 - I Dip.in.Teaching (Carnatic Music), B.Ed.



கல்விமாணி
திருமதி.சோபிகா குகனேசன் SLTS 2 - II
Dip.in.Teaching (Scjence), B.Ed.



கல்விமாணி
திருமதி.எழினி ஜனார்த்தனா SLTS 2 - II
Dip.in.Teaching (Maths-English Medium), B.Ed.



கல்விமாணி
திரு.திரவியம் டொன் றொலோஜான் SLTS 2 - I
Dip.in.Teaching (English), B.Ed.

(C-7382)

வாழ்த்துவோர்: அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள்
கல்லூரிச் சமூகம், யா/விக்னேஸ்வரக் கல்லூரி, கரவெட்டி.


# நீதி இல்லாத...

உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது அமர்வில் விடயம் 8 இன் பொது விவாதத்தில் நேற்று உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

வியன்ன பிரகடனமும் அதன் செயல்முறைகளும் தொடர்பாக 27வது பத்தி கூறுகிறது.

"நீதி நிர்வாகத்துடன் தொடர்புடைய நிறுவனங்களுக்கு முறையாக நிதியளிக்கப்பட வேண்டும். மேலும் சர்வதேச சமூகத்தால் தொழில்நுட்ப மற்றும் நிதி உதவி அதிகரித்த அளவு வழங்கப்பட வேண்டும்."

எவ்வாறாயினும், கடந்த வாரம் இலங்கையில் தமிழ் நீதிபதி சரவணராஜா, "எனது உயிருக்கு அச்சுறுத்தல் மற்றும் மன அழுத்தம் காரணமாக" தனது அனைத்து உத்தியோகபூர்வ பணிகளையும் ராஜினாமா செய்து நாட்டை விட்டு வெளியேறினார்.

சிங்கள பெரும்பான்மையினருக்குள் உள்ள பௌத்த தீவிர போக்குக் கொண்ட மதவாத, இனவாத சக்திகளை எரிச்சலூட்டுவதாக கூறி அவர் பிறப்பித்த உத்தரவை மாற்றுமாறு நாட்டின் சட்டமா அதிபரால் அழுத்தம் கொடுக்கப்பட்டதாகக் கூறப்படும் அழுத்தமும் இதில் அடங்கும்.

போர்க்குற்றவாளி என சந்தேகிக்கப்படும் அரசாங்க எம்.பி ஒருவர், உயரிய சபையில் அடிக்கடி இலங்கை சிங்கள பௌத்த நாடு என்றும், தமிழ் நீதிபதி தனது இடத்தை அறிந்து கொள்ள வேண்டும் என்றும் எச்சரித்து, பாராளுமன்றத்தில் மேற்படி நீதிபதியை வெளிப்படையாகவே மிரட்டினார்.

அதே பாராளுமன்ற உறுப்பினர் தேசிய பாதுகாப்பு துறை தொடர்பான பாராளுமன்ற மேற்பார்வைக் குழுவின் தற்போதைய தலைவராகவும் உள்ளார்.

நினைவேந்தல் நிகழ்வில் கலந்துகொண்ட எனது சக பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் அரசாங்க ஆதரவு குண்டர்களால் கொடூரமான முறையில் தாக்கப்பட்டார்.

இது நடைபெற்ற போது பொலிஸார் அங்கு பார்த்துக் கொண்டிருந்தனர். பொலிஸார் நடவடிக்கை எடுக்காமல் இருந்த நிலையில், பின்னர் ஏற்பட்ட அழுத்தம் காரணமாக, இறுதியில் 6 பேரைக் கைது செய்து, அடுத்தடுத்த நாட்களில் நீதிமன்றத்திற்கு சென்று "இனக் கலவரங்களை" தடுப்பதற்கு சந்தேகநபர்களை பிணையில் விடுவிக்க வேண்டும் என்று காரணம் காட்டி விடுவித்திருந்தனர்.

சரியான சீர்திருத்தங்களை வலியுறுத்தாமல், உடைந்த நீதி நிர்வாக முறைமை கொண்ட இலங்கையைப் போன்று ஒரு நாட்டிற்கு நிதியளிப்பது நிறுவன மயப்பட்ட அநீதியை நிலை நாட்டுவதாகவே அமையும் என்றார். (ம-7)


# பாராட்டி வாழ்த்துகின்றோம்



திருமதி நிசந்தினி விமலேந்திரன்



திருமதி கவின்ஜா நவஜீவா (அதிபர்)




திருமதி ரூபனா சிவகரன்



திருமதி வினோஷிறாணி சக்திவேல்

Best Wishes



திரு.சுப்பிரமணியம் கோகுலன்

இன்று (06.10.2023) **இசுறுபாய பத்திரமுல்லையில்** அமைந்துள்ள கல்வி அமைச்சின் கேட்போர் கூடத்தில் நடைபெறும் 2023ஆம் ஆண்டிற்கான **"குரு பிரதீபா பிரபா"** விருதினைப் பெற்றுக் கொள்ளும் எமது **பாடசாலை முதல்வர்** அவர்களையும் சக ஆசிரியர்களையும் பாராட்டி வாழ்த்துவதில் பெருமகிழ்வடைகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக் கழகம்
(யா/கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை)

(C-7381)



# கண்ணீர் அஞ்சலி



எமது பிரதேச செயலகத்தில் ஓய்வூதிய கிளையில் பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தராக கடமையாற்றும் திருமதி **ஜெயபாலசிங்கம் மணிரஜனி** அவர்களுடைய அன்புத் தாயார்

அமரர் **கணேசசிங்கராஜா தவமணி**

அவர்கள் 04.10.2023 அன்று காலமாகி விட்டார். அன்னாரின் பிரிவால் துயருற்று இருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிரிவுத்துயருடன்...
**பிரதேச செயலாளரும் அனைத்து உத்தியோகத்தர்களும், ஊழியர் நலன்புரிச் சங்கம், பிரதேச செயலகம், பருத்தித்துறை.**

தோற்றம் 04.01.1942 மறைவு 04.10.2023

(C-7383)



# வீட்டுக்கிருத்திய அழைப்பு

கடந்த 07.09.2023 வியாழக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் **இராசையா மகாதேவன்**



தோற்றம் 20.01.1948 மறைவு 07.09.2023

அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் 07.10.2023 சனிக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற இருப்பதனால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும், அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

**இராமலிங்கம் வீதி, திருநெல்வேலி கிழக்கு.** **இங்ஙனம் குடும்பத்தினர்**

(17354)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காலநிலை மாற்றங்களால் பல ஏக்கர் நெற்பயிர்கள் அழிவு

## உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம்

## விவசாய அமைச்சர் எச்சரிக்கை

**(கொழும்பு)**

**இலங்கையில் ஏற்பட்டுள்ள காலநிலை மாற்றத்தின் காரணமாக நாட்டில் உணவுப் பற்றாக்குறை ஏற்படும் அபாயம் உள்ளதாக விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர எச்சரித்துள்ளார்.**



உணவுப் பயிர்களின் உற்பத்தியை அதிகரிப்பதற்கான கலந்துரையாடலின் போது அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். அண்மைய நாட்களில் ஏற்பட்ட வரட்சி காரணமாக 70, 000 ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளது.

பல மாகாணங்களில் பெய்த கனமழை காரணமாக அறுவடையை அண்மித்த பருவத்தில் இருந்து சுமார் நூறு ஏக்கர் நெற்பயிர்கள் அழிவடைந்துள்ளன.

தாழ்நிலங்களில் பெய்து வரும் மழையினால் மரக்கறிச் செய்கைகளும் அழிந்துள்ளதாக அமைச்சர் தெரிவித்துள்ளார். (நி-5)

# பாதணிகள் கொள்வனவிற்காக மாணவர்களுக்கு கொடுப்பனவு

## கல்வி அமைச்சர் சுசில்

(கொழும்பு)

பாடசாலை மாணவர்களுக்கு இரண்டு வாரங்களில் பாதணிகளை கொள்வனவு செய்வதற்காக 3,000 ரூபாய் பெறுமதியான காசோலை வழங்கப்படும் என கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

இதேவேளை மாணவர்களுக்கு வழங்கப்படும் இந்த கொடுப்பனவு எதிர்வரும் வருடத்தில் அதிகரிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-5)

# பிரித்தானிய உயர்மட்ட அமைச்சர் யாழ்ப்பாணத்திற்கு விஜயம்

(கொழும்பு)

அடுத்த வாரம் இலங்கைக்கு வருகைதரவுள்ள பிரித்தானிய உயர்மட்ட அமைச்சரொருவர் யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு, அங்குள்ள நிலவரங்கள் தொடர்பில் ஆராயவுள்ளார்.

நாட்டில் தமிழ் மக்கள் செறிந்து வாழும் வட, கிழக்கு மாகாணங்களில் அண்மைய காலங்களில் இடம்பெற்றுவரும் நில அபகரிப்புக்கள், நீதிமன்ற உத்தரவுக்குப் புறம்பாக இந்துக்களின் வழிபாட்டுத்தலங்கள் அழிக்கப்பட்டு அப்பகுதிகளில் பௌத்த விகாரைகள் நிர்மாணிக்கப்படல், தீவிரமடைந்துவரும் பௌத்த - சிங்கள மயமாக்கம் போன்ற பல்வேறு சர்ச்சைகளைத் தோற்றுவித்திருக்கின்றன.

அந்தவகையில், கடந்த மாதம் 11 ஆம் திகதி ஆரம்பமான ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 54 ஆவது கூட்டத்தொடரில் இணையனுசரணை நாடுகளின் சார்பின் உரையாற்றிய பிரித்தானிய பிரதிநிதி, இலங்கையில் அதிகாரப்பகிர்வு மற்றும் காணி விடுவிப்பு என்பன இன்னமும் கரிசனைக்குரிய பிரச்சினைகளாகக் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டியிருந்தார். அதுமாத்திரமன்றி கடந்தகால மீறல்கள் தொடர்பில் பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கம் என்பன இன்னமும் உறுதிப்படுத்தப்படவில்லை என்று தெரிவித்த அவர், உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு வொன்று ஸ்தாபிக்கப்படும் பட்சத்தில், பாதிக்கப்பட்டோர் உள்ளடங்கலாக சகல தரப்பினரதும் நம்பிக்கையை வென்றெடுப்பதன் ஊடாக மாத்திரமே அதனை வெற்றிகரமானதொரு பொறிமுறையாக உருவாக்க முடியும் என்றும் குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு பின்னணியில் பிரித்தானியாவின் உயர்மட்ட அமைச்சரொருவர் அடுத்த வாரம் இலங்கைக்கு வருகைதரவிருப்பதாக்வும், அவரும் இலங்கைக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் அன்ட்ரூ பற்றிக் உள்ளிட்ட அதிகாரிகளும் எதிர்வரும் 12 ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவிருப்பதாகவும் நம்பத்தகுந்த வட்டாரங்கள் மூலம் அறியமுடிகின்றது.

இவ்வாறு இலங்கைக்கும், குறிப்பாக யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ள பிரித்தானிய அமைச்சர் பல்வேறு முக்கிய தரப்பினரை சந்தித்து, நாட்டின் தற்போதைய நிலவரங்கள் தொடர்பில் கலந்துரையாடல்களை முன்னெடுக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)


# மணிவிழா வாழ்த்து

## பிரதம குருக்களின் ஆசியுரை

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் விஞ்ஞான பாடத்தை மாணவர்களுக்கு கற்பித்து அவர்கள் உயர்நிலை அடைவதற்கு நல்வழிப்படுத்திய மணி விழா நாயகியாகிய திருமதி.கௌரி சுகுமார் ஆசிரியராகப் இப்பாடசாலையில் 13 வருடங்கள் சேவையாற்றி 06.10.2023 வெள்ளிக்கிழமை இன்றுடன் ஓய்வு பெறும் ஆசிரியரின் ஓய்வுக்காலம் சிறப்பாக அமைய எல்லாம் வல்ல கிருபாகர சிவ சுப்பிரமணிய சுவாமிகளின் ஆசி வேண்டி வாழ்த்துகின்றேன்.

பிரதம குரு,
க.சிவதாஸகுருக்கள்

## அதிபரின் வாழ்த்துச் செய்தி

இலங்கையின் வடபால் அமைந்துள்ள யாழ்.மாவட்டத்தில் பிறந்து கல்வி, அறிவு, ஒழுக்கம், நேர்மை என்பவற்றுடன் உயர்ச்சி பெற்று 1984-09.10 அன்று கொழும்பு வூல்பண்டல் பாலிகா மகாவித்தியாலயத்தில் ஆசிரியராகத் தமது பணியை ஆரம்பித்து இன்றுடன் 39 வருடங்கள் ஆசிரிய சேவையில் தமது பணியைப் பூர்த்தி செய்து பணி ஓய்வு பெறுகின்றார்.

யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் 2010.06.20 இல் இருந்து கொக்குவில் இந்து அன்னையின் ஆசிரியர் குழாமுடன் இணைந்து தரம் 6-11 வரையான இடைநிலை வகுப்புக்களுக்கு விஞ்ஞான பாடத் தினைக் கற்பித்தும், விஞ்ஞான ஆய்வு கூடப் பொறுப்பாசிரியராகவும் ஒழுக்காற்றுக் குழுவின் உறுப்பினராகவும் இக் கல்லூரியில் 13 வருடங்களாக பணியாற்றினார். கல்லூரியின் புகழினை மேலோங்கச் செய்தவர்.

இன்று அகவை அறுபதினைப் பூர்த்தி செய்து ஓய்வு பெறும் திருமதி.கௌரி சுகுமார் அவர்களின் ஓய்வுக் காலம் சீரும் சிறப்பாகவும் தமது குடும்பத்தினருடன் பல்லாண்டு காலம் நீடுழி வாழ வாழ்த்துகின்றேன்.

ம.ஞானசம்பந்தன்,
அதிபர், யா/கொக்குவில் இந்துக் கல்லூரி.



## திருமதி. கௌரி சுகுமார்

கொ/வூல்பண்டல் பாலிகா ம.வி
1984.09.10-1987.03.05
யா/பலாலி ஆசிரியர் கலாசாலை
1987.03.16-1988.12.31
கொ/கணபதி வித்தியாலயம்
1989.01.01.-1991.05.05
யா/கொக்குவில் ஸ்ரீஞானபண்டிதா வித்தியாலயம்
1991.05.06-2010.06.19
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி
2010.06.20-2023.10.05

## ஆசிரிய நலன்புரிக் கழகத்தின் வாழ்த்துச் செய்தி

ஈழமணித்திரு நாட்டில் வலி.கிழக்கு பிரதேசத்தில் உள்ள இடைக்காடு என்னும் கிராமத்தில் உதித்து ஆரம்பக்கல்வியில் இருந்து கல்வியை யா/இடைக்காடு மகாவித்தியாலயத்தில் கற்று விஞ்ஞானத்தின் மேல் கொண்ட பற்றினால் விஞ்ஞானப் பிரிவை தெரிவு செய்து கற்று, விஞ்ஞானபாட ஆசிரியராக நியமனத்தைப் பெற்று தமிழ் மாணவர்களுக்கு அர்ப்பணிப்புடன் விஞ்ஞான பாடத்தை கற்பித்துள்ளார்.

2010.06.20 இல் இருந்து யா/கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஆசிரியர்குழாமுடன் இணைந்து விஞ்ஞான பாட ஆசிரியர்களுடனும் ஏனைய ஆசிரியர்களுடன் இணைந்து ஒற்றுமையாக சேவையாற்றியுள்ளார்.

விஞ்ஞான பாடத்தில் விற்பன்னராகத் திகழ்ந்து விஞ்ஞான பாடத்தை மாணவர்கள் விரும்பும் வகையில் கற்பித்தல் செயற்பாட்டில் ஈடுபட்டு மாணவர்களை வெற்றியாளர்களாக்கிய பெருந்தகையுமாவார். அத்துடன் இணைப் பாடவிதானச் செயற்பாடுகளிலும் முன்னின்று செயற்பட்டவராவார்.

காலச் சக்கர சுழற்சியில் அகவை அறுபதை அடையும் இவ்வேளையில் சர்வ நலனும் பெற்று இனிதே வாழ எல்லாம் வல்ல கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமிகளின் அருள் வேண்டி வாழ்த்துகின்றோம்.

ஆசிரியர் நலன்புரிக்கழகம், யா/கொக்குவில் இந்து கல்லூரி.

ஆசிரிய நலன்புரிக் கழகம், யா/ கொக்குவில் இந்துக் கல்னாரி

(73343)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழில் ஆரம்பமான தாச்சி சுற்றுப்போட்டி





அழிந்து வரும் தமிழர்களின் மரபுவழி பாரம்பரிய விளையாட்டை மக்களிடத்தில் கொண்டு செல்லும் நோக்குடன் யாழ். மாவட்ட தாச்சி சங்கத்தின் அனுமதியுடன் யாழ்.மாவட்ட ரீதியில் தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத்துறை நடத்தும் மாபெரும் தாச்சி சுற்றுப்போட்டி கடந்த திங்கட்கிழமை தாவடி காளிஅம்மன் விளையாட்டு மைதானத்தில் ஆரம்பமானது.

ஆரம்ப போட்டியில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம் ஆகிய கழகங்கள் பங்குபற்றியிருந்தன. இதில் நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் 4 புள்ளிகளையும் சுதுமலை புவனேஸ்வரி அம்பாள் விளையாட்டுக் கழகம் 3 புள்ளிகளையும் பெற்றமைக்கு அமைய நவாலி தென்றல் விளைாட்டுக் கழகம் வெற்றியினை தனதாக்கிக் கொண்டது.

இந் நிகழ்வில் யாழ். மாநகர சபையின் முன்னாள் முதல்வர் சட்டத்தரணி வி.மணிவண்ணன், யாழ். மாவட்ட தாச்சி சங்க நிர்வாகிகள், தமிழ் மக்கள் கூட்டணியின் விளையாட்டுத்துறை பொறுப்பாளரும் முன்னாள் யாழ் மாநகர சபை உறுப்பினருமாகிய மகேந்திரன் மயூரன் தமிழ் மக்கள் கூட்டணியின் கல்வி மேம்பாட்டுத்துறை பொறுப்பாளரும்முன்னாள்யாழ்.மாநகரசபை உறுப்பினருமாகிய வரதராஜன் பார்த்திபன், யாழ். மாவட்ட தாச்சி சங்க தலைவர்.எ.விஜெயவிந்தன், செயலாளர் சீலன் ஆகியோர் கலந்து சிறப்பித்தனர். (5-6-33)

## உலகக் கிண்ணத்தை வாகை சூடப்போவது யார்?

### சமூக வலைத்தளத்தில் வைரலான படம்



13 ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா இந்தியாவில் நேற்று வியாழக்கிழமை ஆரம்பமானது.

நீயா-நானா? என சவாலுக்கு 10 அணிகள் வரிந்து கட்டுகின்றன. ஒவ்வொரு அணியும் மற்ற அணியுடன் தன ஒரு முறை மோதிய பிறகு டாப்-4 இடங்களை பிடிக்கும் அணிகள் அரை இறுதிக்கு செல்லும்.

பருவமழை காலத்திற்கு மத்தியில் போட்டி நடப்பதால் அதற்கு ஏற்பவும் அணிகள் தங்களை தயார்படுத்துகின்றன. இதில் யார் சம்பியன் ஆகப்போகிறார்கள் என்பது குறித்து சமூக வலைத்தளங்களில் உலகக் கிண்ணத்தை சுற்றி அணியின் கப்டன்கள் ஓடி வலம்வரும் படத்தை கேலிச்சித்திரமாக வரைந்துள்ளதை இணையத்தில் பகிர்ந்ததையடுத்து வைரலாகி வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (5-6)

## காற்பந்து உலகக்கிண்ண தொடரை நடத்தும் இடங்களை வெளியிட்ட பீபா

2030 ஆம் ஆண்டுக்கான பீபா காற்பந்து உலகக் கிண்ண தொடரை மொரோக்கோ, போர்த்துக்கல் மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் நடத்தும் என சர்வதேச காற்பந்து அமைப்பான பீபா அறிவித்துள்ளது.

போட்டியின் 100 ஆண்டு நிறைவைக் குறிக்கும் வகையில் அர்ஜென்டினா, பராகுவே மற்றும் உருகுவே ஆகிய நாடுகளில் முதல் மூன்று போட்டிகள் நடைபெறவுள்ளன.

நேற்று முன்தினம் புதன்கிழமை அறிவிக்கப்பட்ட முடிவின் பிரகாரம் உலகக் கிண்ண காற்பந்து தொடர் மூன்று கண்டங்களில் உள்ள



ஆறு வெவ்வேறு நாடுகளில் நடைபெறவுள்ளது.

இதற்கிடையில், சவுதி அரேபியா 2034 ஆம் ஆண்டுக்கான பீபா உலகக் கிண்ண காற்பந்து தொடரை நடத்துவதற்கான தனது விருப்பத்தை அறிவித்துள்ளது என அந் நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. (5-6)

## உலகக்கிண்ண இலங்கை அணியில் மீண்டும் இணைந்த தீக்சன

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர சுழல் பந்து வீச்சாளரான மஹீஷ் தீக்சன உலகக் கிண்ண கிரிக்கெட் தொடரில் பங்கேற்கவுள்ள இலங்கை கிரிக்கெட் குழாத்துடன் இணைந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் புதன்கிழமை இந்தியாவுக்கு பயணமாகியுள்ளார்.

ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடரின்போது உபாதைக்குள்ளான மஹீஷ் தீக்சனவால், ஆசிய கிண்ண இறுதிப் போட்டியிலும் பங்கேற்க முடியவில்லை. மருத்துவ ஆலோசனைகளை பின்பற்றி வந்திருந்த நிலையில், கடந்த 26 ஆம் திகதியன்று இந்தியாவுக்கு பயணமான இலங்கை குழாத்தினருடன் மஹீஷ் தீக்சனவால் பயணிக்க முடியவில்லை.

தற்போது உபாதையிலிருந்து மீண்டு வந்துள்ள தீக்சன நாளை டெல்லியில் நடைபெறவுள்ள தென்னாபிரிக்க அணியுடனான முதலாவது போட்டியில் பங்கேற்பார் எனவும் காயத்திற்குள்ளாகியுள்ள துஷ்மந்த சமீர உலகக் கிண்ணத் தொடரின் நடுப்பகுதியில் இலங்கை குழாமுடன் இணைந்துகொள்வார் என எதிர்பார்க்கப்படுகிறது. (5-6)

## தங்கம் வென்ற தருஷிக்கு 10 மில்லியன் பரிசு

19 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் ஓட்டப் போட்டியில் தங்கம் வென்ற தருஷி கருணாரத்னவுக்கு 10 மில்லியன் ரூபாவை வழங்க இலங்கை கிரிக்கெட் சபை தீர்மானித்துள்ளது.

19 வயதான அவர், சீனாவின் ஹாங்சோவில் நடைபெற்று வரும் கான்டினென்டல் மல்டி ஸ்போர்ட்ஸ் போட்டியில் பெண்களுக்கான 800 மீற்றர் தோற்றத்தை 2.03.20 நிமிடங்களில் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றார்.

21 ஆண்டுகளுக்குப் பிறகு நாட்டிற்காக முதல் ஆசிய விளையாட்டு தடகள தங்கப் பதக்கத்தை வென்று



வரலாறு படைத்த தருஷி கருணாரத்னவுக்கு கிரிக்கெட் சபை பாராட்டு தெரிவித்துள்ளது.

தருஷி கருணாரத்ன 2019 ஆம் ஆண்டு அகில இலங்கை பாடசாலை விளையாட்டுப் போட்டிகளில் 400 மீற்றர் மற்றும் 800 மீற்றர் போட்டிகள் இரண்டிலும் தங்கப் பதக்கம் வென்றமை குறிப்பிடத்தக்கது.(5-6)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# நீதித்துறையின் சுயாதீனத்தை உறுதிப்படுத்தக் கோரும் மனு

## ஐ.நா அலுவலகத்தில் கையளிப்பு



(கொழும்பு)

இலங்கைத்தீவில் நீதித்துறை மீது அரச நிர்வாகத் துறையினரால் மேற்கொள்ளப்பட்டுவரும் பல்வகை நெருக்கீடுகள் காரணமாக, நாட்டைவிட்டு வெளியேறிச் சென்றுள்ள முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜாவிற்கு நீதியும் பாதுகாப்பும் கிடைக்கக் கோரியும், நீதித்துறையினது சுயாதீனத்தைப் பாதுகாக்கக் கோரியும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கிளிநொச்சி மாவட்டக் கிளையின் ஏற்பாட்டில் , கிளிநொச்சி மாவட்ட சட்டத்தரணிகளின் பங்கேற்போடு திங்கட்கிழமை கிளிநொச்சி நகரில் கவனயீர்ப்புப் போராட்டம் நடைபெற்றிருந்தது.

இதன்போது, ஐக்கிய நாடுகள் சபையின் பொதுச்செயலாளர் அன்ரனியோ குட்ரெஸிற்கு அனுப்பிவைப்பதற்கு ஏதுவாக, பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனிடம் கையளிக்கப்பட்ட கோரிக்கை மனு, ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதி மார்க் ஆன்ட்ரே பிரான்சிடம் கொழும்பிலுள்ள அவரது அலுவலகத்தில் வைத்து, நேற்று முன்தினம் பாராளுமன்ற உறுப்பினர் சிறீதரனால் கையளிக்கப்பட்டது. (நி-5)

# பாடசாலை விடுமுறை டிசம்பர் 22 ஆம் திகதி

## உத்தியோகபூர்வ அறிவித்தல் விரைவில்

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டிற்கானகான உயர்தர பரீட்சை திகதிகள் மாற்றமடைந்துள்ள நிலையில் டிசம்பர் மாத விடுமுறையில் மாற்றம் மேற்கொள்ளப்படவுள்ளதாக கல்வி அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளார்.

நேற்று இடம்பெற்ற பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அவர் இந்த விடயத்தை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், உயர்தரப் பரீட்சை தினம் தொடர்பில் பரீட்சைகள் திணைக்களம் உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளது.

ஜனவரி 4 முதல் 31ஆம் திகதி வரையில் பரீட்சை நடக்கவுள்ளது. இதன்படி யாரேனும் விண்ணப்பிக்க இருந்தால் அவர்களுக்கு 3 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

பரீட்சை தொடர்பான கால அட்டவணை அடுத்த வாரமளவில் வெளியிடப்படும்.

இதேவேளை பாடசாலை விடுமுறை இம்முறை டிசம்பர் 22 ஆம் திகதியளவில் வழங்கப்படலாம். ஆரம்ப பிரிவுகள் ஜனவரி 2ஆம் திகதி ஆரம்பிக்கப்படும். பரீட்சை முடிவடைந்த பின்னர் மற்றைய பாடசாலைகள் ஆரம்பிக்கப்படும்.

இது தொடர்பான உத்தியோகபூர்வ அறிவித்தல் கல்வி அமைச்சினால் வெளியிடப்படும் என குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# வடக்கு மாகாண ஆளுநர் அமைச்சர் ஜீவன் சந்திப்பு



(கொழும்பு)

வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம் சார்ள்ஸ் மற்றும் அமைச்சர் ஜீவன் தொண்டமான் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் புதன்கிழமை கொழும்பில் இடம்பெற்றது.

சந்திப்பின்போது, எதிர்காலத்தில் வடமாகாணத்தின் அபிவிருத்திக்கு தன் முழு ஆதரவையும் வழங்குவதாக அமைச்சர் உறுதியளித்தார். (நி-5)

# நெருக்கடி நிலைமையில் நாடு இணைந்து பணியாற்ற வாருங்கள்

## –எதிரணிக்கு ரணில் மீண்டும் அழைப்பு–

(கொழும்பு)

எமது நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றது. நாட்டைக் கட்டியெழுப்பும் வேலைத்திட்டங்களில் அரசுடன் இணைந்து பணியாற்ற முன்வாருங்கள் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்க்கட்சிகளுக்கு மீண்டும் அழைப்பு விடுத்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறுகையில், நான் சரியென்று இரண்டு பக்கங்களிலும் (ஆளும், எதிரணி) உள்ளவர்களும் கூறுகின்றனர். அப்படியென்றால் இரண்டு பக்கத்தில் உள்ளவர்களும் ஒன்றாக இணைந்து வேலைத்திட்டங்களை முன்னெடுப்போம்.

ஏன் எங்களுக்கு இணைந்து செயற்பட முடியாது? நாடு தற்போது நெருக்கடியான நிலைமையில் இருக்கின்றது. இந்த நேரத்தில் இரண்டு தரப்பினரும் ஒன்றிணைந்தே நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். எதிர்க்கட்சியாக இருந்தாலும். ஆளும் கட்சியாக இருந்தாலும் எங்கள் அனைவருக்கும் ஒரே அச்சுறுத்தலே உள்ளது.

அதில் இருந்து மீள்வதற்கு வேறு வேலைத்திட்டங்கள் இருக்குமாக இருந்தால் அதனைக் கூறுங்கள். ஆனால், யாரும் வேலைத்திட்டங்களை முன்வைக்கவில்லை.

தற்போதைய கொள்கைத் திட்டங்களை இரண்டு தரப்பிலும் உள்ளவர்கள் ஏற்றுக்கொள்வதால் இரண்டு தரப்பினரும் ஒன்றாக வேலை செய்து நாட்டுக்குக் காட்டுவோம் என தெரிவித்துள்ளார். (நி-5)

# உணவுப் பொதி விலைகளில் மாற்றம்

(கொழும்பு)

உணவுப் பொதிகளின் விலை அதிகரிக்கப்படுவதாக அகில இலங்கை சிற்றுண்டிச்சாலை உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (வியாழக்கிழமை) முதல் அமுலாகும் வகையில் குறித்த விலை அதிகரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது

இதன்படி, தேநீரின் விலை 10 ரூபாவால் அதிகரிக்கப் படுவதோடு கொத்துரொட்டி 20 ரூபாவினாலும், பிரைட் ரைஸ் பொதி ஒன்றின் விலை 50 ரூபாவினாலும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# இராசிபலன்

06.10.2023
புரட்டாதி 19 , வெள்ளிக்கிழமை
சப்தமி முற்பகல் 10.32 மணிவரை

திருவாதிரை பின்னிரவு 1.45 மணிவரை
சுபநேரம் 6.02-7.32 மணிவரை
இராகுகாலம் 10.32-12.02 மணிவரை

இலங்கை ஆசிரியர் தினம்
சந்திராஷ்டமம்- விசாகம், அனுசம்

வள்ளவன்

**மேஷம்** – செலவுகளில் சிக்கனம் காட்டி சேமிக்க முற்படுவீர்கள், நீண்டநாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும்.

**கடகம்** – இடமாற்றத்தால் இனிய மாற்றம் காண வேண்டிய நாள், சுப காரியச் செலவுகளில் தாராளம் காட்டுவீர்கள், சயன சுகக் குறைவான நாள்.

**துலாம்** – காரிய வெற்றிக்கு நண்பர்கள் ஒத்துழைப்பு கிடைக்கும், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், தொழில் வளர்ச்சிக்கு குறுக்கீடாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** – உற்சாகத்தோடு பணிபுரியும் நாள், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், போசன சுகமுண்டு.

**ரிஷபம்** – நிம்மதிக்காக ஆலயத்தை நோக்கி அடியெடுத்து வைப்பீர்கள், உறவினர்கள் மத்தியில் மதிப்பும், மரியாதையும் உயரும், நிதி நிலை உயரும் நாள், வாக்கு மேன்மையுண்டு.

**சிம்மம்** – மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம் பெறலாம், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியத்தில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** – வழிபாடு குதூகலம் தரும், மனதில் இனம் புரியாத சஞ்சலங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவு செய்வதில் சிறு இடையூறுகள் ஏற்படலாம்.

**கும்பம்** – உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் நன்மையுண்டு, தாழ்ந்த சுபாவமுண்டு.

**மிதுனம்** – குடும்பச் செலவுகளில் சிக்கனம் காட்ட முற்படுவீர்கள், வழிபாட்டால் பெருமை காண வேண்டிய நாள், உள்ளத்திலும், இல்லத்திலும் அமைதி கூடும் நாள்.

**கன்னி** – அன்பு நண்பர்கள் ஆர்வத்தோடு உதவி செய்ய முன்வருவர், கனவு பலிதமுண்டு, எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், போசன சுகமுண்டு.

**தனுசு** – குடும்ப நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், அரசு வழியில் அனுகூலமுண்டு, இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள்.

**மீனம்** – தொலை தூரத்திலிருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, வழிபாட்டால் ஆர்வம் காட்டுவீர்கள், நண்பர்கள் வழியில் ஒத்துழைப்புண்டு.

வேகத்தை விட நிதானமும் பாதுகாப்பும் சிறந்ததாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கு ஆளுநரை சந்தித்து கலந்துரையாடிய சமூக பிரதிநிதிகள்



(யாழ்ப்பாணம்)
யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த சிவில் சமூக பிரதிநிதிகள் குழுவொன்று வடக்கு மாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சார்ள்ஸை அண்மையில் ஆளுநர் செயலக மாநாட்டு மண்டபத்தில் சந்தித்து வடக்கு மாகாணத்தின் அபிவிருத்தியோடு சம்பந்தப்பட்ட பல்வேறு முக்கிய விடயங்கள் குறித்தும் கலந்துரையாடப்பட்டது.

யாழ் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தரும் தற்போதைய வவுனியா பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் மோகனதாஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க ஒழுங்குபடுத்தப்பட்ட இந்தச் சந்திப்பில், மும்மத பிரதிநிதிகள், பேராசிரியர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், இளைப்பாறிய அதிபர்கள், முன்னாள் நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள், கைத்தொழில் மற்றும் வர்த்தக சமூகப் பிரதிநிதிகள், விவசாய மற்றும் தொழிலாளர் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர். (5-6-33)

## சித்த மருத்துவ விரிவுரையாளருக்கு இந்தியாவில் தங்கம்



(அராலி)
யாழ்ப்பாண பல்கலைக்கழக விரிவுரையாளராக கடமையாற்றும் மருத்துவர் நித்தியப்பிரியா சிவராம் 2022 ஆம் ஆண்டு தமிழ்நாடு மருத்துவர் எம்.ஜீ.ஆர் மருத்துவப் பல்கலைக்கழகத்தினால் நடத்தப்பட்ட பட்டமேற்படிப்பு குழந்தை மருத்துவத்துறையில் முதலிடம் பெற்று தங்கப்பதக்கத்தை பெற்றுள்ளார்.

இதுவரை காலத்திலும் சித்தமருத்துவத்தில் குழந்தை மருத்துவத்துறையில் இலங்கையிலிருந்து சென்று பட்டமேற்படிப்பை முடித்து வந்த இரண்டாவது மருத்துவர் என்பதுடன் யாழ். பல்கலைக்கழகத்தின் இளநிலைப்பட்டப்படிப்பிலும் இறுதியாண்டில் முதல் தரத்தில் சித்திபெற்று முதலிடம் பெற்று பல்கலைக்கழகத்தின் சிறப்பு விருதுகளைப் பெற்றமை என்பதும் குறிப்பிடத்தக்கது. (5-6-104)

## ஆசிரியர் தினம்

(சாவகச்சேரி)
யா/போக்கட்டி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் ஆசிரியர் தின நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை காலை 11 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பாடசாலையின் அபிவிருத்திக் குழுத் தலைவர் திருமதி ம.திருமகள் தலைமையில் இடம்பெறவுள்ள மேற்படி நிகழ்வில் பிரதம விருந்தினராக தென்மராட்சிக் கல்வி வலய கணக்காளர் திருமதி சுதர்சினி சதீஸ் கண்ணா கலந்து சிறப்பிக்கவுள்ளார். (5-6-30)

## கலாசாலையில் ஆசிரியர்தினமும் இசைப் பேழையும் வெளியீடு

(யாழ்ப்பாணம்)
கோப்பாய் ஆசிரியர் கலாசாலையின் நூற்றாண்டு கால ஆசிரியர் தின விழா இன்று வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு ஆசிரிய மாணவர் மன்றத்தலைவர் சுப்பிரமணியம் தனசீலன் தலைமையில் நடைபெறும்.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வாழ்நாள் பேராசிரியர் பொன். பாலசுந்தரம் பிள்ளை கலந்து கொள்ளவுள்ளார். கலாசாலையின்பழைய மாணவரும் யாழ். சென்ஜோன்ஸ் கல்லூரி ஆசிரியரும் இசையமைப்பாளருமாகிய ஜேம்ஸ் அன்ரன் லூர்ஜினோவின் கலாசாலைத்தாயே..என்ற இசைப்பேழையும் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. (5-6)

## பொதுக் கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கரணவாய்)
புலோலி தென்மேற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 14 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு கந்த முருகேசனார் சனசமூக நிலைய முன்பள்ளி மண்டபத்தில் சங்கத்தலைவர் மு.ஜெகதேவன் (ஜே.பி) தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந் நிகழ்வில் பருத்தித்துறை பிரதேச செயலக கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் க.வாசுதேவன் கலந்து கொள்ளவுள்ளார். (5-6-60)

## யாழில் வர்த்தக கண்காட்சி கலாசார வளாகத்தில் இன்று ஆரம்பம்

(அராலி)
யாழ்ப்பாண மாவட்டத்தில் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பு மேம்படுத்தும் நோக்கில் இலங்கை கைத் தொழில் அமைச்சின் தேசிய தொழில் முயற்சி அபிவிருத்தி அதிகார சபை மாவட்ட செயலகத்தோடு இணைந்த மேட் இன் ஸ்ரீலங்கா வர்த்தகக் கண்காட்சி இன்று ஆரம்பமாகவுள்ளது.

இந்த் கண்காட்சியை நாளை மற்றும் நாளை மறுதினம் யாழ்ப்பாண கலாசார நிலையத்தின் வளாகத்தில் இடம்பெறவுள்ளது. உள்ளூர் உற்பத்தியாளர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து சுமார் 60 தொடக்கம் 80 வகையான உற்பத்தியாளர்கள் பங்குபற்றும் வகையில் இந்த கண்காட்சி ஒழுங்கு செய்யப்பட்டிருக்கிறது. (5-6-104)



இந்திய ரோட்டரிக் கழகங்களின் நிதிப் பங்களிப்பில், யாழ்.மாவட்டத்தில் உள்ள மூன்று பாடசாலைகளில் கல்வி கற்கும் தேவைப்பாடுடைய 21மாணவர்களுக்கு அண்மையில் காலணிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளன.
(படம்: சுபேசன்)

# இனந்தெரியாத நபர்களால் மோ.சைக்கிளுக்கு தீ வைப்பு

(தருமபுரம்)
வீட்டில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிலுக்கு இனந்தெரியாத விசமிகளால் தீ வைப்பு.



அக்கரையான் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கருத்தாஸ் குடியிருப்பு பகுதியில் நேற்று இனந் தெரியாத நபர்களினால் வீட்டின் கண்ணாடிக்கு கல்வீச்சு நடத்தப்பட்டுள்ளதுடன் வீட்டு முற்றத்தில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிளையும் தீயிட்டுக் எரித்துவிட்டு தப்பிச் சென்றுள்ளனர். வீட்டு உரிமையாளர்கள் சத்தம் கேட்டுவெளியில் வந்து பார்த்தபொழுது மோட்டார் சைக்கிள் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக அக்கரையான் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளதை யடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-6-316-)

## கரணவாய் பகுதியில் வீடு உடைத்து திருட்டு

(கரணவாய்)
கரணவாய் பகுதியில் வீடு உடைத்து மூன்று லட்சம் பெறுதியான பொருட்கள் களவாடப்பட்ட சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

வீட்டின் உரிமையாளர் வெளிநாடு செல்லவுள்ளமையடுத்து உறவினர்களிடம் வீட்டினை ஒப்படைத்து சென்றுள்ளனர்.

நேற்று முன்தினம் வீட்டினை பராமரிப்பவர் வெளியே சென்ற சமயம் பார்த்து வீட்டின் முன்கதவை உடைத்து உள்ளே சென்று அலுமாரியை உடைத்து உடமைகளை வெளியே கொட்டிச் சிந்தி இருபந்தையாயிரம் ரூபா பணம், ஒரு பவுண் தோடு மற்றும் பெறுமதியான கைத்தொலை பேசியையும் எடுத்து தப்பித்து சென்றுள்ளனர்.

வெளியே சென்ற நபர் வீட்டினை வந்து பார்க்கும் போது கதவு மற்றும் அலுமாரி உடைக்கப்பட்டதை அடுத்து சம்பவம் தொடர்பில் நெல்லியடி பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதனையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (5-6-60)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நடைப்பிணமாக்கும் 'சோம்பி'

## இலங்கைக்குள்ளும் ஊடுருவல்

### அதிகரிக்கும் ஆபத்து; எச்சரிக்கும் வைத்தியர்

**(கொழும்பு)**

**மனிதர்களை நடைப்பிணமாக மாற்றும் சோம்பி போதைப்பொருள் இலங்கைக்கு ஊடுருவியுள்ளதாகவும் அவை ஹெரோயினை விட 50 மடங்கு ஆபத்தானவை எனவும் வைத்தியர் விராஜ் பெரேரா தெரிவித்திருந்தார்.**

இணைய வழி கலந்துரையாடலில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

சோம்பி போதைப்பொருள் என்பது விலங்குகளை அமைதிப்படுத்த, கட்டுப்படுத்த, மிருக வைத்தியர்களால் பாவிக்கப்படும் ஒரு வகை மருந்துகளை அதிக செறிவில், சட்டவிரோதமாக, ஏனைய போதைப் பொருட்களுடன் கலந்து தயாரிக்கப்படுவது.

நியூயோர்க், பிலடெல்பியா, லிவர்பூல், லண்டன் போன்ற உலக பெரு நகரங்கள் இப்போது இந்த வகை போதைப் பொருள் பாவனையால் பெரும் அச்சுறுத்தலை எதிர்நோக்கி வருகின்றன.

அதிலும் குறிப்பாக இந்த நாடுகளில் வாழும் வாலிபர்கள், இளம் பெண்கள் இதற்கு அடிமையாவது மிகப் பெரிய சிக்கலை ஏற்படுத்தி இருக்கிறது. இதனால் முழு நகரமும், நாடும் பாதிக்கப்படுகின்றது.

இது சோம்பிகளின் நகர், இது சோம்பிகளின் வீதி என்று அழைக்கப்படும் நிலைக்கு இந்த நாடுகளில் நிலமை மோசமடைந்திருக்கிறது.

இந்த போதை பாவனையால், குறுகிய காலத்திலயே உடல் தசைகளை சிதைத்து விடும். பெரிய பெரிய புண்கள் உடலில் ஏற்படும். காலப்போக்கில் தசை நார்கள் பலமிழந்து, உடல் இயக்கம் தடைப்பட்டு, சமநிலை இல்லாமல் போகும். தள்ளாடிய நடை வரும்.

மீட்டெடுக்கும் எந்த மருந்துகளும் தற்போது பாவனையில் இல்லை. இதனால், இவ்வாறான சோம்பிகள் அதிக போதையினால் உயிரிழப்பை உடனடியாக சந்திக்க வேண்டி ஏற்படுகிறது. இது அமெரிக்காவில் உள்ள மருத்துவர்களுக்கும் வைத்தியசாலைகளுக்கும் பெரும் சவாலாகவே மாறியிருக்கிறது. அமெரிக்காவிலே கவலைக்கிடம் என்றால் நமது நாட்டில் சொல்லவா வேண்டும்?

நாட்டை ஆள்பவர்களும், சட்டத்தை நிலைநாட்டுபவர்களும் போதைப்பொருளில் இலாபம் அடைவதால் போதைப்பொருளுக்கு உரிய தீர்வைக் கொண்டுவருவதில் அக்கறை காட்டுவதில்லை எனவும் வைத்தியர் விராஜ் பெரேரா மேலும் தெரிவித்திருந்தார். (நி-5)

# அடுத்த வருடத்திற்கான முன்கூட்டிய ஒதுக்கீட்டுச் சட்டமூலம் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

2024 ஆம் ஆண்டுக்கான முன்கூட்டிய ஒதுக்கீட்டுச் சட்டமூலம் நேற்று பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதன்படி 2024 ஆம் ஆண்டிற்கான மொத்த அரச செலவினம் 8 டிரில்லியன் ரூபாய்கள் என்று மதிப்பிடப்பட்டுள்ளது. (நி-5)



**முக்கியஸ்தர்களான தமிழர் பிரதிநிதிகளுக்கு தமிழ் மொழிபெயர்ப்புடன் புனித குர்ஆன் வழங்கும் நிகழ்வில் யாழ்ப்பாணம் நூலகத்தில் பிரதம நூலகர் கௌரவ திருமதி அனுஷியா சிவகரன் அவர்களுக்கு கலாபூஷணம் யாழ் பரீட் இக்பால் தமிழ்மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆன் பிரதி வழங்குவதை படத்தில் காணலாம். அருகில் நூலக உதவியாளர் கோதை நந்தகுமார் அவர்களையும் காணலாம்.**

(17348)

# இரு நாட்களில் 11 பேர் மாயம்

## ஆபத்தான நிலையில் இலங்கை மக்கள்

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

நாட்டில் கடந்த இரு நாட்களில் மாத்திரம் 11 பேர் காணாமற் போயுள்ளனர் என எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

நேற்று பாராளுமன்றத்தில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், காணாமல் பேர் 11 பேரில் 5 சிறுவர்கள் அடங்குவர். இலங்கையில் 220 இலட்சம் மக்களில் 123 இலட்சம் மக்கள் ஆபத்தான நிலைமையில் உள்ளதாக யு.என்.டி.பி தனது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

ஆனால் இந்த அரசாங்கமோ நாட்டில் எந்தவொரு பிரச்சினையும் இல்லை என்பதுபோல தான் செயற்பட்டு வருகின்றது.

நாட்டில் மின்சாரக்கட்டணம், எரிபொருள் கட்டணம், எரிவாயு கட்டணம் என அனைத்தையும் தற்போது உயர்த்தியுள்ளது.

அதுமட்டுமல்லாது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, டி.டபிள்யு. எனும் ஜேர்மன் தொலைக்காட்சிக்கு அண்மையில் வழங்கிய நேர்க்காணலில், சர்வதேச விசாரணையொன்று தேவையில்லை எனத் தெரிவித்துள்ளார்.

எனினும், உயிர்த்த ஞாயிறு தாக்குதல் விவகாரத்தில் சர்வதேச விசாரணையொன்றுக்கு செல்வோம் என அவர் தான் அன்று கூறியிருந்தார்.

அவர் பதவியில் இல்லாத போது சர்வதேச விசாரணை அவசியம் என்று கூறிவிட்டு, தற்போது ஜனாதிபதியான பின்னர் எப்படி அதனை வேண்டாம் எனக் கூறமுடியும்?

நாட்டிலுள்ள பெரும்பாலோனோருக்கு உள்ளக பொறி முறையின் கீழ் நம்பிக்கையில்லை. எமக்கும் நம்பிக்கையில்லை. இதனால்தான் சர்வதேச விசாரணைக்கு செல்ல வேண்டும் என நாமும் வலியுறுத்துகிறோம் என சஜித் பிரமதாச தெரிவித்தார். (நி-5)

# வீட்டின் மேல் விழுந்த பாறை

## 3 பிள்ளைகளின் தந்தை பலி

(காலி)

காலியில் பாறையொன்று வீட்டின் மீது விழுந்ததில் மூன்று பிள்ளைகளின் தந்தை உயிரிழந்துள்ளார். இந்த சம்பவம் நேற்றுக்காலை இடம்பெற்றுள்ளது.

அவர் தனது வீட்டில் இருந்தபோது பாறையுடன் மண்சரிவு ஏற்பட்டு வீட்டின் சுவரை இடித்துத் தள்ளியுள்ளது. அதில் சிக்குண்டே இவர் உயிரிழந்துள்ளார்.

மரணமடைந்தவரின் குடும்பத்தைச் சேர்ந்த சிலர் அந்த சந்தர்ப்பத்தில் வீட்டில் இருந்ததாகவும் எனினும் அவர்களுக்கு எவ்விதமான பாதிப்புகளும் ஏற்படவில்லையெனவும் தெரியவருகின்றது.

வீட்டுக்கு மேலாக இருக்கும் மலையில் சுமார் 15 அடி உயரத்தில் இருந்தே இந்த பாறை புரண்டுவந்துள்ளது எனத் தெரியவந்துள்ளது. (நி-5)

**உங்கள் இல்லங்களில் இருந்தவாறே வலம்புரியில் விளம்பரம் செய்யும் வாய்ப்பு**

**அன்பு வாசகர்களே!**

உங்கள் வீட்டில் இடம்பெறும் நிகழ்வுகள் மற்றும் வர்த்தக விளம்பரங்களை எவரின் உதவியுமின்றி உங்கள் வலம்புரியில் நேரடியாகப் பிரசுரிக்க முடியும்.

**தொடர்புகளுக்கு:**

**தொலைபேசி:**

**076 097 3127**

**021 221 7603**

**Viber/ Whatsapp: 076 636 3378**

E.mail:

Valampurii@yahoo.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# நிபா வைரஸ் ஓய்ந்து வரும் நிலையில் கேரளாவில் ஆபிரிக்க பன்றிக் காய்ச்சல்


(டில்லி)

கேரள மாநிலம், கோழிக்கோடு மாவட்டத்தில் உயிரிழந்த காட்டுப்பன்றிகளின் உடலில் இருந்து ஆபிரிக்க பன்றி காய்ச்சல் நோய் கண்டறியப்பட்டுள்ளதால் கால்நடை துறையினர் தீவிரக் கண்காணிப்பை மேற்கொண்டு வருகின்றனர்.

தற்போது கேரளாவில் நிபா வைரஸ் முழுமையாக கட்டுக்குள் கொண்டுவரப்பட்டிருப்பதாக அரசு அறிவித்துள்ளது. இந்த நிலையில் கோழிக்கோடு பகுதியில் அடுத்தடுத்து காட்டுப் பன்றிகள் உயிரிழந்தன.

இதனால் சந்தேகம் அடைந்த கால்நடை துறையினர் உயிரிழந்த பன்றிகளின் உடலில் இருந்து திசுக்களை எடுத்து பரி சோதனைக்கு அனுப்பி வைத்திருந்தனர்.

ஆய்வுக் கூடத்தில் நடத்தப்பட்ட ஆய்வில், காட்டுப் பன்றிகள் உயிரிழப்பிற்கு ஆபிரிக்கன் பன்றிக் காய்ச்சல் நோயே காரணம் என தெரிய வந்துள்ளது.



இருப்பினும் இந்த நோய் மனிதர்களைத் தாக்குவதற்கான வாய்ப்புகள் இல்லை என்பதால் அது குறித்து அச்சம் கொள்ள தேவையில்லை என கால்நடை துறையினர் அறிவித்துள்ளனர்.

இதேபோல், தமிழ்நாட்டின் நீலகிரி மாவட்டம் முதுமலை வனப்பகுதியில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு ஆபிரிக்கன் பன்றி காய்ச்சலால் 200 இற்கும் மேற்பட்ட காட்டுப்பன்றிகள் அடுத்தடுத்து உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# உலகப் ...

## சைரன் ஒலி...

(மொஸ்கோ) – மூன்றாவது உ... ஜனாதிபதி வி... ஏற்படுத்தியுள்ளது...

இந்த நிலையில், ரஷ்யாவில் உக்ரைன் போர் தொடங்கிய பின்னர் சைரன்கள் ஒலிப்பது வழமையாக இருந்து வருகிறது.

எனினும், நேற்று வழமைக்கு மாறாக காலை 10.30 மணியளவில் திடீரென நாடளாவிய ரீதியில் சைரன்கள் ஒலித்தன.

சைரன் ஒலி எழுப்பிய நிலை

# கறுப்பு வைரத்தால் மிளிரும் நெயில் பாலிஷ் அறிமுகம்




(சாக்ரமெண்டோ)

கறுப்பு வைரத்தால் மிளிரும் உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த நெயில் பாலிஷ் அறிமுகம்.

பொதுவாக பெண்கள் சிலர் நகங்களை பராமரித்து பல வண்ணங்களில் நெயில் பாலிஷ் போடுவது வழக்கம். அவர்களுக்கு பிடித்தமான வண்ணங்களில் காலத்துக்கு காலம் நெயில் பாலிஷ் சந்தைகளில் அறிமுகமாகிக் கொண்டிருக்கின்றன.

அந்த வகையில் உலகிலேயே மிகவும் விலை உயர்ந்த பிளாக் டைமண்ட் நெயில் பாலிஷ் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. அசச்சூர் என்ற பெயர் கொண்ட இந்த நெயில் பாலிஷின் விலை 6 கோடி 37 இலட்சத்து, 12 ஆயிரம் ஆகும்.

இதை கலிபோர்னியா வில்லாஸ் ஏஞ்சல்ஸ்ஸை சேர்ந்த வடிவமைப்பாளரான அசாச்சூர் போகாசியன் என்பவர் உருவாக்கியுள்ளார். தூரத்தில் இருந்து சாதாரணமாக இந்த நெயில் பாலிஷ் தோன்றினாலும் அதன் உள்ளே 267 கரட் கறுப்பு வைரம் சேர்க்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# கனடா பாராளுமன்றத்தில் சபாநாயகராக முதல் முறையாக கறுப்பினத்தவர் தெரிவு

(ஒட்டாவா)

கனடா பாராளுமன்றத்தின் புதிய சபாநாயகராக கிரெக் பெர்கஸ் என்ற கனேடிய கறுப்பினத்தவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை கூடிய பாராளுமன்றில் உத்தியோக பூர்வமாக புதிய சபாநாயகராக அறிவிக்கப்பட்டார்.


கனேடிய வரலாற்றில் முதன் முறையாக சபாநாயகராக தெரிவு செய்யப்பட்ட கறுப்பினத்தவர் என்ற பெருமையினை கிரெக் பெர்கஸ் தனதாக்கியுள்ளதாக கூறப்படுகிறது.

முன்னாள் சபாநாயகர் அண்டனி ரோட்டா கடந்த வாரம் தனது பதவியினை இராஜினாமா செய்திருந்ததால், புதிய சபாநாயகருக்காக மீண்டும் தேர்தல் நடாத்தப்பட்டது. இந்த தேர்தலில் கியூபெக் லிபரல் சட்டமியற்றுபவரான, 54 வயதான கிரெக் பெர்கஸ், என்பவர் புதிய சபாநாயகராக தெரிவுசெய்யப்பட்டார்.



பெர்கஸ் பதவியேற்ற வுடன் “அனைவரையும் நான் மரியாதையுடன் வழி நடத்துவேன் என உறுதியளித்த அவர், ஒருவரையொருவர் மதித்து நடக்க வேண்டும் எனவும் சக சட்டமியற்றுபவர்களை ஊக்குவித்தார்” என்றும் ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளது. (நி-5)

# சிக்கிமில் ஏற்பட்ட திடீர் வெள்ளத்தால் 14 பேர் உயிரிழப்பு, 154 பேர் மாயம்



(டில்லி)

இந்தியாவின் வடகிழக்கு மாநிலமான சிக்கிமில் ஏற்பட்ட வெள்ளத்தில் சிக்குண்டு உயிரிழந்தோரின் எண்ணிக்கை 14 ஆக அதிகரித்துள்ளது.

சிக்கிம் மாநிலத்தில் மேக வெடிப்பு காரணமாக பீஸ்டா ஆற்றில் திடீர் வெள்ளம் ஏற்பட்டது. அதன்போது 23 இராணுவ வீரர்கள் மாயமான நிலையில் அவர்களை தேடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது எனத் தெரிவித்த நிலையில்,

இதுவரை 26 பேர் வரை காயமடைந்துள்ளதுடன் 154 பேர் வரை காணாமல் போயுள்ளதாக அந்த நாட்டு ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

இந்த நிலையில் அனர்த்தத்திற்கு உள்ளான பகுதிகளில் இருந்து இதுவரை இரண்டாயிரத்திற்கும் மேற்பட்டோர் வெளியேற்றப்பட்டுள்ளதாகவும் 22 ஆயிரத்திற்கும் அதிகமான மக்கள் வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த நாட்டு அனர்த்த முகாமைத்துவ நிலையம் அறிவித்துள்ளது.

வெள்ளப்பெருக்கு காரணமாக 14 பாலங்கள் உடைந்து வீழ்ந்துள்ளதாகவும் மூவாயிரத்திற்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

காணாமல் போனவர்களை தேடும் பணியில் மீட்பு படையினர் ஈடுபட்டு வருகின்றனர். (நி-5)

# இம்ரான்கானுக்கு சிறையில் உயிர் அச்சுறுத்தல்

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான்கான் சிறையில் விஷம் வைத்துக் கொல்லப்படலாம் என அவரது வழக்கறிஞர் நயிம் பஞ்சுதா அச்சம் தெரிவித்துள்ளமை பாகிஸ்தானில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து அவர் தெரிவித்துள்ளதாவது, இம்ரான் கானைச் சிறையில் சென்று சந்தித்தபோது அவர் தனக்கு சிறையில் உயிர் அச்சுறுத்தல் இருப்பதாகவும் தனக்கு வழங்கப்படும் உணவில் விஷம் கலக்கப்படலாம் எனவும் தெரிவித்திருந்தார்.

அதுமட்டுமல்லாது சிறையில் தான் உளரீதியான பாதிப்பை எதிர்கொள்வதாகவும் தற்போது சிறிய அறையில் மாற்றப்பட்டிருப்பதாகவும் தெரிவித்துள்ளார்.

இம்ரான்கானின் நிலை குறித்து இஸ்லாமாபாத் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள மனு இன்று விசாரணைக்கு வரவுள்ளது.

ஊழல் குற்றச்சாட்டில் கடந்த ஒகஸ்ட் மாதம் 5 ஆம் திகதி கைது செய்யப்பட்ட இம்ரான்கான் ராவல் பிண்டியில் உள்ள அடியாலா சிறையில் அடைக்கப்பட்டு சிறைவாசம் அனுபவித்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போருக்கு தயாராகுங்கள்!

## லி எழுப்பி பகிரங்கமாக அறிவித்த புடின்



)

உலகப்போருக்கு தயாராக இருக்குமாறு ரஷ்ய மக்களுக்கு அந்நாட்டின் விளாடிமிர் புடின் பகிரங்க அறிவித்தல் விடுத்துள்ளமை பரபரப்பை ளது.

யில் தொலைக்காட்சி மற்றும் வானொலிகளில் மக்களை 3 ஆம் உலகப்போருக்கு தயாராக இருக்குமாறு ஜனாதிபதி விளாடிமிர் புடின் எச்சரிக்கும் அறிவிப்பு ஒலிபரப்பப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்ய அவசர சூழல் அமைச்சகம் வெளியிட்ட அறிவிப்பில், சைரன்களை ஒலியெழுப்பும் போது மக்கள், திகிலடையக்கூடாது, அமைதியாக இருக்க வேண்டும், தொலைக் காட்சி அல்லது வானொலியை இயங்கு நிலையில் வைத்து அதில் கூறப்படும் தகவலை கவனிக்க வேண்டும்.

அவசர அச்சுறுத்தல் ஏற்படும் பட்சத்தில், அதை மக்களுக்கு சரியான நேரத்தில் தெரிவிப்பதற்காகவே இந்த எச்சரிக்கை அமைப்பு வடிவமைக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்த வார இறுதியில் பிறந்தநாள் கொண்டாட இருக்கும் புடின், தனக்கு தானே கொடுத்துக் கொள்ளும் பிறந்தநாள் பரிசாக, அணு ஏவுகணை ஒன்றை வீசலாம் என்ற தகவல் வெளியாகி அச்சத்தை மேலும் உருவாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-5)

# ரஷ்யாவின் வான் பாதுகாப்பு அமைப்பை ட்ரோன் தாக்குதல் மூலம் அழித்த உக்ரைன்

(மொஸ்கோ)

உக்ரைன் ரஷ்யாவின் வான் பாதுகாப்பு அமைப்பை ட்ரோன் தாக்குதல் மூலம் அழித்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

ரஷ்ய உக்ரைன் போர் முடிவதற்கு எந்த அறிகுறி யும் இல்லாமல் தொடர்ந்த வண்ணம் காணப்படுகின்ற நிலையில் உக்ரைன் ரஷ்யாவின் வான் பாதுகாப்பு மையத்தை அழித்துள்ளதாக கூறப்படுகிறது.

தாக்குதல் தொடர்பில் உக்ரைனிய ஊடகம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

ரஷ்யாவின் பெல்கோரோட் பகுதிக்கு அருகில் இருந்த எஸ்-400 டிரையம்ப் வான் பாதுகாப்பு அமைப்பை உக்ரைனிய ட்ரோன்கள் சேதப்படுத்தி அழித்து இருப்பதாகவும் இந்த தாக்குதல் இரவு நேரத்தில் நடத்தப்பட்டதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.


இந்த தாக்குதல் குறித்து



பேசிய உக்ரைனிய பாதுகாப்பு சேவை வட்டாரங்கள், உக்ரைனிய ட்ரோன் தாக்கு தலால் ஏற்பட்ட சேதங்கள் குறித்து விரிவான தகவல் களை கூறவில்லை.

இதற்கு முன்னதாக ரஷ்யாவின் பெல்கோரோட், பிரையன்ஸ்க் மற்றும் குர் ஸ்க், ஆகிய பகுதிகள் மீது இரவு நேரத்தில் நடத்தப்பட்ட தாக்குதலில் 31 உக்ரைனிய ட்ரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டு இருப்பதாக ரஷ்யா தெரிவித்து இருந்தது குறிப்பிடத்தக்கது. (நி-5)

# சிகரெட் கொள்வனவு செய்ய தடை விதிக்கும் பிரித்தானியா



(லண்டன்)

பிரித்தானியாவில் இளைஞர்கள் சிகரெட் கொள்வனவு செய்யும் செயற்பாட்டுக்கு தடை விதிக்க பிரித்தானிய அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக கூறப்படுகின்றது.

இந்த பிரேரணை சட்டமாக நிறைவேற்றப்பட்டால் ஒவ்வொரு வருடமும் சிகரெட் வாங்குவதற்கான வயது ஒரு வருடமாக அதிகரிக்கப்படும் என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அந்த திட்டத்திற்கமைய 2040 ஆம் ஆண்டுக்குள் இளைஞர் சமூகம் மத்தியில் புகைப் பிடிப்பதை விரைவில் நிறுத்த முடியும் என எதிர்பார்க்கப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை புகைபிடிப்பதால் ஏற்படும் நோய்களுக்கு சிகிச்சை அளிப்பதற்கு பிரித்தானிய சுகாதார சேவைக்கு ஒவ்வொரு வருடமும் 17 பில்லியன் பவுண்டுகள் செலவாகுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# 125 ஆண்டுகளில் இல்லாத அளவுக்கு ஜப்பானில் அதிகூடிய வெப்பநிலை

(டோக்கியோ)

ஜப்பானில் கடந்த 125 ஆண்டுகளில் இல்லாத அளவிற்கு இந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் அதி கூடிய வெப்பம் பதிவாகியிருப்பதாக அந்நாட்டு வானிலை ஆய்வு நிலையம் தெரிவித்துள்ளது.

வழமைக்கு மாறாக ஜப்பானில் கடந்த செப்டெம்பர் மாதம் பதிவான வெப்ப நிலை, சராசரி வெப்ப நிலையை விட 2.66 டிகிரி செல்சியஸ் அதிகமாக பதிவாகியுள்ளது.

இது தொடர்பில் அந்நாட்டு வானிலை ஆய்வு நிலையம் அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் 1898



ஆம் ஆண்டு முதல்வானிலை குறித்த தரவுகளைப் பதிவு செய்து வருகிறோம்.

அதன்படி, 2023 செப்டெம்பர் மாதத்தில்தான் அதி கூடிய வெப்பநிலை பதிவாகியுள்ளதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன.

"இந்த வெப்பநிலை இயல்பிற்கு மாறானது. இந்த வெப்ப நிலை பதிவு முந்தைய அதிகபட்ச வெப்ப நிலையையே மிஞ்சிவிட்டது. இந்த வெப்பநிலை அதிகரிப்பு அசாதாரணமானது இல்லை" என ஜப்பானிய வானிலை நிலைய அதிகாரி தெரிவித்தார். (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கில் சிங்களவர்கள் குடியேற ஏன் அனுமதி இல்லை?

## வடக்கு வேறொரு நாடா?

### இனவாதத்தைத் தூண்டும் சரத்வீரசேகர



(கொழும்பு)

யுத்தத்தை தொடர்ந்து வடக்கில் கண்டுபிடிக்கப்பட்ட 400 இற்கும் அதிகமான பௌத்த தொல்பொருள் சின்னங்களுள் அதிகளவானவை தற்போது அழிக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

தேசிய கணக்காய்வாளர் அலுவலகம் கோப் தெரிவு குழுவிடம் சமர்ப்பித்த அறிக்கையில் இந்த விடயம் குறிப்பிடப்பட்டுள்ளதாக நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் உரையாற்றிய சரத் வீரசேகர தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

வடக்கிலுள்ள சிங்கள தொல்பொருள் சின்னங்கள் தொடர்ந்தும் அழிக்கப்பட்டு வருகின்றன. தொல்பொருள் திணைக்களத்தின் சட்டங்களை வடக்கு மாகாணத்தில் நடைமுறைப்படுத்த அந்த திணைக்களத்தினருக்கு அதிகாரம் இல்லை.

அச்சுறுத்தல்கள் மற்றும் எச்சரிப்புக்கள் விடுக்கப்படுவது காரணமாக இந்த நிலை உருவாகியுள்ளது. வடக்கிலிருப்பது வேறு ஒரு நாடா என எண்ணத் தோன்றுகிறது. அத்துடன், சிங்கள மக்களுக்கு வடக்கில் குடியேற எந்த அனுமதியும் இல்லை. அவர்களுக்கு அங்கு வாழவோ, தமக்கான காணியொன்றை வாங்கவோ வியாபார நடவடிக்கைகளை முன்னெடுக்கவோ அனுமதி இல்லை. முஸ்லீம் மக்களுக்கும் இதே நிலை தான் என சரத் வீரசேகர குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# கொள்கை வட்டி வீதங்கள் குறைப்பு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கி, கொள்கை வட்டி வீதங்களை குறைத்துள்ளது.

நேற்றுமுன்தினம் மாலை கூடிய இலங்கை மத்திய வங்கியின் நாணய சபை இந்த தீர்மானத்தை மேற்கொண்டுள்ளது.

இதற்கமைய துணைநில் வைப்பு வசதி வீதம் 10 சதவீதமாக குறைக்கப்பட்டுள்ளது.

இது முன்னதாக 11 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டிருந்தது.


அத்துடன் துணை நில் கடன் வசதி வீதத்தை இலங்கை மத்திய வங்கி 11 சதவீதமாக குறைத்துள்ளது. (நி-5)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 150 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 400 | 400 | 450 | 400 |
| தக்காளி | 140 | 120 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 120 | 150 | 150 | 150 |
| கோவா | 200 | 150 | 160 | 200 |
| கரட் | 350 | 300 | 280 | 300 |
| பூசணி | 60 | 80 | 60 | 80 |
| புடோல் | 80 | 80 | 120 | 130 |
| வாழைக்காய் | 200 | 180 | 180 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 250 | 250 | 350 |
| பெரிய வெங்காயம் | 200 | 200 | 240 | 280 |
| பாகற்காய் | 400 | 450 | 450 | 500 |
| வெண்டக்காய் | 120 | 120 | 100 | 200 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 200 | 200 | 200 |
| லீக்ஸ் | 160 | 160 | 150 | 200 |
| பீற்றூட் | 140 | 130 | 150 | 160 |
| கறிமிளகாய் | 250 | 250 | 280 | 400 |
| முருங்கைக்காய் | 50 | 80 | 100 | 120 |
| போஞ்சி | 400 | 400 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 160 | 120 | 120 | 150 |
| கீரை - 1 பிடி | 100 | 70 | 70 | 100 |
| தேசிக்காய் | 1200 | 1200 | 1200 | 1600 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 70 | 60-90 |
| இராசவள்ளி | 400 | 450 | 450 | 550 |
| வெங்காயப்பூ | 300 | 300 | 400 | 400 |
| முள்ளங்கி | 80 | 120 | 120 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 40 | 180 | 50 | 60 |
| ஈரப்பலா | 100 | 100 | 120 | 150 |

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2841

**மிதுன்**




**விஸ்ணு**

பிரச்சினையை நாம இப்படி
உத்து பாக்குற
அதே நேரத்தில்.....



பிரச்சனையும் நம்மை
இப்படித்தானே உத்து பார்க்கும்....!!!

**பிரியா**

மந்திரியாரே ஏன் அவனை அடிக்கிறீங்க?...
மன்னா..நம்ம இராணுவ ரகசியத்தை
வெளியில சொல்லி விட்டான்



நம்ம கிட்ட தான் இராணுவமே கிடையாதே
அதைதான் சொல்லிட்டான்

**கிசா**




கல்யாணத்த தவிர எல்லாம் பாத்தாச்சு

**தமிழ்**

என்னா மானங்கெட்ட மூளையோ தம்மாதுண்டு
பாஸ்வேட் ட நியாபகம் வச்சுக்க முடியல...



ஆனா அவமானப்பட்டது அசிங்கப்பட்டது
மட்டும் வருஷ கணக்குல நியாபகம் வச்சுக்குது.

**கவி**

Duty முடிச்சி வீட்டுக்கு போனா... wife சீரியல் பார்த்துட்டு இருந்தா...

புருஷன் வந்தது கூட தெரியாமல் அப்படி என்ன டிவி ன்னு தான்டா கேட்டேன்...

என்ன டென்ஷன்ல இருந்தாளோ எனக்கு வச்சிருந்த சாப்பாட்டை நாய்க்கு கொண்டு போய் போட்டுட்டா

எனக்கு வந்துது பார் கோபம்....



அப்பறம் ஏட்டையா...

அப்பறம் என்ன.. நானும் நாயும் share பண்ணி சாப்பிட்டோம்

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பௌத்த பிக்குகளால் இலக்கு வைக்கப்படும் முல்லை மாவட்டம்

## செல்வம் எம்.பி

(நெளுக்குளம்)

**முல்லைத்தீவு மாவட்டம் தென்னிலங்கை இனவாதிகள் மற்றும் பௌத்த பிக்குகளால் குறி வைக்கப்படுகின்றது என பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.**




நிகழ்வொன்றின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார். குருந்தூர் மலை தொடர்பான தீர்ப்பை மாற்ற வேண்டும் என்று அழுத்தங்கள், உயிர் அச்சுறுத்தல் பிரயோகிக்கப்பட்டுள்ளதால் நீதிபதி நாட்டைவிட்டு சென்றிருப்பது என்பது அனைவரும் அறிந்த உண்மை.

இந் நிலையில் பாராளுமன்ற உறுப்பினர்கள் பகிஷ்கரிப்பதென்பது ஒரு விடயம். ஆனால் அவர்களுடைய பதவிகளை இராஜினாமா செய்வதென்பது என்னைப்பொறுத்த மட்டிலே சாலச்சிறந்ததாக இருக்காது.

தென் னிலங் கையிலே உள்ள இனவாதிகள் கூடுதலாக பௌத்த பிக்குகள் எங்களுடைய பூர்வீகத்தை ஒழிப்பதற்காக தமிழர்கள் வாழ்ந்தார்கள் என்ற வரலாற்றை சிதைப்பதற்காக முழு மூச்சோடு செயற்பட்டு கொண்டு வருகின்ற நிலையிலே பாராளுமன்றத்தை துறந்தோமாக இருந்தால் நிலத்தையோ, மக்களுடைய பிரச்சினைகளையோ தட்டிக் கேட்கின்ற நிலைமை அல்லது சர்வதேசத்திடம் எடுத்து சொல்கின்ற நிலமைகள் சற்று மாறாக அமைந்துவிடும் எனத் தெரிவித்தார். (5-6-299)

# இடியன் துப்பாக்கிகளுடன் முல்லையில் ஒருவர் கைது



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு கேப்பாபிலவு பகுதியில் இடியன் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

நேற்று முன்தினம் இரவு சட்டவிரோதமாக பதிவுகளின்றி இடியன் துப்பாக்கி வைத்திருப்பதாக பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் கேப்பாபிலவு பகுதியிலுள்ள வீட்டிற்கு சென்ற பொலிஸார் சோதனை செய்த போது நபர் ஒருவர் இடியன் துப்பாக்கிகளுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாக தெரிவித்தனர். (5-6-299)

# இராணுவமுகாமை அகற்ற வேண்டாம் கிளிநொச்சியில் கவனயீர்ப்பு



(முறிகண்டி)

இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாம் என தெரிவித்து போராட்டம் ஒன்று நேற்று கிளிநொச்சியில் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி 55 ஆவது படைப்பிரிவின் முன் கவனயீர்ப்பில் ஈடுபட்ட மக்கள் மாவட்ட செயலகம் வரை சென்று மகஜர் ஒன்றையும் கையளித்துள்ளனர்.

வடக்கு கிழக்கு பகுதியில் உள்ள இராணுவ முகாம்களை அகற்ற வேண்டாம் எனத் தெரிவித்தே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. (5-6-100)

# புதைகுழி அகழ்வுப் பணியை தொடர்வதற்கு நிதிப்பற்றாக்குறை



(நெளுக்குளம்)

கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி மீண்டும் ஆரம்பிக்கப்படாமல் நிறுத்தப்படக்கூடிய சூழலே காணப்படுவதாக சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ தெரிவித்துள்ளார்.

மீண்டும் அகழ்வு பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும்? ஏற்கனவே எடுக்கப்பட்ட 17 உடற்கூற்றுக்கான பரிசோதனை முடிவுகள் எப்போது கிடைக்கப் பெறும் என முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியை நேற்று தொடர்பு கொண்டு வினவிய போது, மாவட்ட செயலகத்திலுள்ள பிரதான கணக்காளர் நிதி இல்லை என நேற்று முன்தினம் கூறியுள்ளதாகவும் அகழ்வு பணி நிறுத்தப்படக்கூடிய சூழலே காணப்படுவதாகவும், மேலும் உடற்கூற்று பரிசோதனை முடிவுகளும் தாமதமாவதற்கான சாத்தியக்கூறுகளே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த மாதம் செப்டெம்பர் 6 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டு செப்டெம்பர் 15 ஆம் திகதி வரை அகழ்வாய்வுகள் இடம் பெற்றிருந்தது.

இவ் அகழ்வு பணியில் 17 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையில் குறித்த அகழ்வுப்பணியானது இடை நிறுத்தி வைக்கப்பட்டு ஒக்டோபர் மாதம் மூன்றாம் வாரமளவில் இதே குழுவினரால் மீள ஆரம்பிக்கப்படும் என சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவ ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (5-6-299)


# வடமராட்சியில் ஒரு லட்சம் பனை விதைகள் நடும் செயற்றிட்டம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சியில் ஒரு லட்சம் பனை விதைகள் நாட்டும் செயற்றிட்டம் வடமராட்சியின் அபிவிருத்தி நிறுவனத்தால் இரண்டாம் கட்டமாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு தேசிய நீர் வழங்கும் பின்புறமாக உள்ள வல்லிபுரம் பகுதியில் நடைபெறவுள்ளது. ஆர்வம் உள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர்.(5-6-90)





சாவால்களுக்கு மத்தியில் தன்னிறைவான உணவு உற்பத்தியை நோக்கி எனும் தொனிப்பொருளில் கிளிநொச்சி மாவட்ட பயிற்சி நிலைய வயல்விழா வட்டக்கச்சி மாதிரி விவசாய பண்ணையில் நேற்று இடம்பெற்றது. (படங்கள்:-தேவானந்தம்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 301





கரையில், கோயில் மதில் ஓரமாக நடந்து கொண்டிருந்த சச்சரவை அவர் கவனித்தார். கூட்டத்தின் நடுவில் கக்கத்தில் தடியுடன் பரம சாதுவைப்போல் நின்ற ஆழ்வார்க்கடியானைக் கையினால் சமிக்ஞை செய்து அருகில் அழைத்தார். ஆழ்வார்க்கடியான் பயபக்தியுடன் கையைக் கட்டிக்கொண்டு கடற்கரையோரம் சென்று நின்றான்.

"திருமலை! இது என்ன தெருக்கூத்து?" என்றார் அநிருத்தர்.

"குருவே! எல்லாம் கபட நாடக சூத்திரதாரியான அந்தக் கண்ணனின் திருக்கூத்துத்தான்! என் கண்களில் காண்பதை நான் நம்புவதா, இல்லையா என்றே தெரியவில்லை. நான் காண்பது கனவா? அல்லது எல்லாம் வெறும் மாயையா?"

"திருமலை! உன்னைப் பரம வைஷ்ணவன் என்று நினைத்தேன். எப்போது பிரபஞ்சத்தை மித்தை என்று சொல்லும் மாயாவாதியானாய்?"

"குருவே! பரம வைஷ்ணவ பரம்பரையில் அவதரித்த தாங்கள் சைவ சமயி ஆகும்போது நான் என் மாயவாதி ஆகக் கூடாது? என்னுடைய பெயரை மாற்றிக்கொண்டு ஸ்ரீ சங்கர பகவத் பாதாச்சாரியாரின் அடியார்க்கடியான் ஆகிவிடுகிறேன்."

"பொறு! பொறு! நான் சைவ சமயி ஆனதாக யார் சொன்னது?"

"தங்கள் திருமேனியில் உள்ள சின்னங்கள் சொல்லுகின்றன!"

"ஆகா! திருமலை! நீ இன்னும் முன்போலவே இருக்கிறாய் புறச்சின்னங்களுக்கே முக்கியம் கொடுக்கிறாய்! நெற்றியில் இடுகிற சந்தனத்தைச் சாய்த்து இட்டால் என்ன? நிமிர்ந்து இட்டால் என்ன?"

"குருவே! நான் ஒன்றும் அறியாதவன் எது முக்கியம், எது அமுக்கியம் என்று தெரியாதவன். தாங்கள்தான் என்னைத் தெளிவித்து ஆட்கொள்ள வேண்டும்."

"எல்லாம் தெளிவிக்கிறேன். நான் தங்கும் இடத்துக்கு வந்து சேர்! அதோ! கடலில் ஒரு சிறிய தீவு தெரிகிறது பார்த்தாயா? அங்கேயுள்ள மண்டபத்துக்கு வா."

"குருவே! இதோ இந்தச் சண்டைக்காரச் சைவர்கள் என்னை வரவிடவேண்டுமே?" என்று ஆழ்வார்க்கடியான் சொல்லிக் கையினால் அவர்களைச் சுட்டிக் காட்டினான்.

அதுவரை சும்மாயிருந்த வீர சைவர்கள் உடனே நெருங்கி வந்தார்கள்.

"பிரம்மாதி ராஜரே! இந்த வைஷ்ணவன் எங்கள் மண்டைகளை உடைத்து விடுவானாம்! இவனை தக்கபடி தண்டிக்கவேண்டும்!" என்று ஒருவர் ஆரம்பித்தார். மற்றவர்கள் தலைக்குத் தலை பேசலானார்கள்.

"இவனுக்குத் தண்டனை நான் கொடுக்கிறேன். நீங்கள் போகலாம்" என்றார் அநிருத்தர்.

இதனால் அவர்கள் திருப்தி அடையவில்லை. "நாங்களே இவனுக்குத் தண்டனை கொடுக்கக் கூடாதா? இவனுடைய முன் குடுமியைச் சிரைத்து, இவனுடைய ஊர்த்வ சின்னங்களையெல்லாம் அழித்து, இவனைக் கிணற்றில் போட்டு முழுக்காட்டி" என்று அடுக்கினார் ஒருவர்.

"என்ன சொன்னீர்கள்?" என்று ஆழ்வார்க்கடியான் கண்களில் தீ எழத் திரும்பி நோக்கினான்.

அநிருத்தப் பிரம்மராயர் அப்போது, "பட்டர் மணிகளே! இவன் பெரிய முரடன். இவனைத் தண்டிக்க உங்களால் ஆகாது. நான் பார்த்துக்கொள்கிறேன்" என்றார்.

பிறகு தம்மைத் தொடர்ந்து வந்த படகில் இருந்த அகப் பரிவார வீரர்களைப் பார்த்து, "உங்களின் எட்டுப் பேர் இறங்கி இவனை நம் இடத்துக்குக் கொண்டு வாருங்கள்!" என்றார்.

அவ்வளவுதான். மறுகணம் வீரர்கள் எட்டுப் பேர் கரையில் குதித்தார்கள் ஆழ்வார்க்கடியானைச் சூழ்ந்து கொண்டு நின்றார்கள்.

படகு மேலே சென்றது.

படை வீரர்கள் புடைசூழ ஆழ்வார்க்கடியானும் போனான்.

பட்டர்களும் மற்றவர்களும் அந்த வைஷ்ணவனுடைய முரட்டுத்தனத்தைக் குறித்துப் பலவாறு பேசிக் கொண்டு கலைந்து போனார்கள்.

## ஆசிரியர்கள் பற்றிய பொன் மொழிகள்

1.தாயின் முகம் தான் குழந்தையின் முதல் பாடப் புத்தகம்.

- காந்தியடிகள்

2.நான் உயிரோடு இருப்பதற்கு, என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால், சிறப்பாக வாழ்வதற்கு என் ஆசிரியருக்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

- மாவீரன் அலெக்ஸண்டர்

3.தெய்வங்கள் யாரைத் தண்டிக்க விரும்புகின்றன. அவர்கள் ஒரு ஆசிரியரை உருவாக்குகிறார்கள்.

- லூசியஸ் அன்னி செனெகா

4.இயற்கை தான் மிகச் சிறந்த ஆசிரியர்.

- கார்லைல்

5.அனுபவம் சிறந்த ஆசிரியர். அவருடைய பாடங்களை நாங்கள் நன்றாக நினைவில் வைத்திருக்கிறோம்.

- ஜேம்ஸ் ஃபெனிமோர் கூப்பர்

6.அனுபவம் எல்லாவற்றிற்கும் ஒரு ஆசிரியர்.

-கை ஜூலியஸ் சீசர்

7.புதியதைப் புரிந்துகொள்பவர், பழையதை நேசிப்பவர், ஆசிரியராக முடியும்.

-கன்பூசியஸ்

8.ஒரு ஆசிரியர் என்பது தனது குழந்தைகளை விட மற்றவர்களின் குழந்தைகளை எவ்வாறு வளர்ப்பது என்பதை நன்கு அறிந்த ஒரு நபர்.

-ஜூலியன் டி பால்கனரே

9.கல்விக்கூடம் ஒரு தோட்டம். மாணவர்கள் செடிகள். ஆசிரியர்கள் தோட்டக்காரரர்கள்.

-[illegible] ஜேக்ளர்

### ஆசிரியப் பெருந்தகையீர்

வருங்காலச் சந்ததியை
வண்ணமுடன் உருவாக்கும்
பெரும் பணியை செய்கின்ற
ஆசிரியப் பெருந்தகையீர்
அரும் புகழை அறிவு எனும்
அரிய மணம் வீசுகின்ற
நறும் பூக்கள் ஆக்கிடுவீர்
நாடெல்லாம் மணம் வீசட்டும்

அமெரிக்க றொக்கெற்று
அம்புலியை தொட்டது போல்
தமிழர்களின் அறிவியலும்
தடம் பதிக்க வேண்டாமோ
அரிய சுடர்ப் பூமியிலே
எமக்காக எந்திரங்கள்
இயற்றி வைக்க வேண்டாமோ

தமிழ்த் தாயின் அருந்
தனயர் நாங்களென
அமிழ்தான மாணவரும்
ஆசிரியப் பெரியோரும்
இமையோடு விழியாக
இணைந்திங்கு நலம் விளைத்து
தழைத்தோங்க - அறிவுத்
தண்ணீரை வாத்திடுவீர்.

சி.பிரியங்கள்
தரம் 5B

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்வி எனும் பெருங்கடலில் இருந்து கரை சேர்த்திடும் கலங்கரை விளக்கங்கள் ஆசிரியர்கள்.
– யாரோ

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வெறுப்புக்குரிய நாளாகிவிட்ட ஆசிரியர் தினம்

ஒக்ரோபர் 5 சர்வதேச ஆசிரியர் தினம். இலங்கையில் ஒக்ரோபர் 6ஆம் திகதி ஆசிரியர் தினம் கொண்டாடப்படுகிறது.

இன்று ஒக்ரோபர் 6. இலங்கையில் ஆசிரியர் தினம் கொண்டாடப்படும் நாள்.

சர்வதேச ஆசிரியர் தினத்தின் ஆரம்ப கட்டங்களில் அதன் எழுச்சி மிகப் பிரமாதமாக இருந்தது.

பாடசாலைகள் தோறும் மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு மரியாதை செலுத்துவதை பெரும் பாக்கியமாகக் கருதினர்.

அதேநேரம் ஆசிரியர்களும் தங்களின் ஆசிரியப் பணிக்குக் கிடைக்கின்ற மிக உயர்ந்த கௌரவமாக அதைக் கருதினர்.

அந்த வகையில் ஆசிரியர் தினம் ஒவ்வொரு வீடுகளிலும் களை கட்டியது. மாணவர்கள் தங்கள் ஆசிரியர்களுக்கு மாலை அணிவித்துக் கௌரவிக்க வேண்டும் என்று விருப்புக் கொள்ள, அதனை நிறைவேற்றி வைப்பதைப் பெற்றோர்கள் தமது தலையாய கடமையாகக் கருதினர்.

ஆம், அன்றைய ஆசிரியர் தினத்தில் பெற்றோர்கள், மாணவர்கள் சேர்ந்து அதிபர், ஆசிரியர்களைக் கௌரவித்தனர். அந்தக் கௌரவம் கௌரவமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அதிலும் ஆசிரியரிடம் அதிகமாக அடி வாங்கிப் படிக்கும் மாணவர்கள் ஆசிரியர் தினத்தில் தமக்கு அடித்துப் படிப்பித்த ஆசிரியர்களுக்கு மாலை அணிவிப்பதைப் பெருமையாக நினைத்தனர்.

அதேசமயம் ஆசிரியரும் அந்த மாணவரைத் தம் பிள்ளையாக மதித்தனர்.

இவை காரணமாக பாடசாலைகளில் கற்றல் செயற்பாடுகள் முன்னேற்றமடைந்தன.

ஆசிரியர் – மாணவர் – பெற்றோர் என்ற உறவு பலமடைந்தது. ஆசிரியர் கூறுகின்ற அறிவுரைகளை மாணவர்கள் ஏற்றுக் கொண்டனர். பெற்றோர்களும் அதனை ஊக்குவித்தனர்.

ஆனால் இப்போது ஆசிரியர் தினம் என்றால், ஐயா! அது வேண்டாம் என்று ஆசிரியர்கள் கூறுகின்ற அளவுக்கு நிலைமை வந்துவிட்டது.

அதேபோன்று ஆசிரியர் தினத்தை விமர்சித்து ஏளனம் செய்கின்ற பெற்றோர்களும் அதிகரித்துவிட்டனர்.

கூடவே மாணவர்களும் ஆசிரியர் கௌரவிப்பை உதாசீனம் செய்கின்ற அளவுக்கு வந்து விட்டனர்.

உண்மை. மாணவர்களைத் தண்டிப்பது குற்றம் என்பது சட்டமாகியபோது, ஆசிரியர்களின் கைகளில் விலங்கிடப்பட்டது. அவர்கள் குற்றவாளிக் கூண்டில் ஏற்றப்பட்டனர். ஊடகங்களில் அவை முக்கிய இடம்பிடித்தன.

தவிர, சட்டங்களை சாதகமாக்கிக் கொண்ட பெற்றோர்கள் ஆசிரியர்களை அதட்டினர். வெருட்டினர். மனித உரிமை, சிறுவர் உரிமை ஆகிய சட்டங்களை காட்டி பயமுறுத்தினர்.

போதாக்குறைக்கு தம் பிள்ளைகள் ஆசிரியரால் தாக்கப்பட்டதை மிகைப்படுத்த வைத்தியசாலைகளில் அனுமதித்தனர். அந்த நடைமுறைகள் ஆசிரியர்களைக் கடுமையாகப் பாதித்தன.

ஆசிரியர்களின் கௌரவம் சந்திக்கு வந்தது. அந்தளவோடு ஆசிரியர் தினம் வெறுப்புக்குரிய ஒரு நாளாக ஆசிரியர்களுக்கு ஆகிவிட்டது.

இனி ஆசிரியர் தினம் மறைக்கப்பட்ட நாளாகவே அமையும்.

இது எங்கள் தமிழர் பிரதேசத்தை மையப்படுத்தியதாக அமைகிறது.

# கொக்குத்தொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணிகள் நிறுத்தப்படலாம்

## சட்டவைத்திய அதிகாரி வாசுதேவ

(கொழும்பு)

கொக்குதொடுவாய் மனித புதைகுழி அகழ்வு பணி மீண்டும் ஆரம்பிக்கப்படாமல் நிறுத்தப்படக்கூடிய சூழலே காணப்படுவதாக சட்ட வைத்திய அதிகாரி வாசுதேவ தெரிவித்துள்ளார்.

மீண்டும் அகழ்வு பணிகள் எப்போது ஆரம்பிக்கப்படும்? ஏற்கனவே எடுக்கப்பட்ட 17 உடற்கூற்றுக்கான பரிசோதனை முடிவுகள் எப்போது கிடைக்கப் பெறும் என முல்லைத்தீவு மாவட்ட வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவவை நேற்று தொடர்பு கொண்டு வினவிய போது,

முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திலுள்ள பிரதான கணக்காளர் நிதி இல்லை என நேற்றுமுன்தினம் கூறியுள்ளதாகவும் அகழ்வு பணி நிறுத்தப்படக்கூடிய சூழலே காணப்படுவதாகவும் , உடற்கூற்று பரிசோதனை முடிவுகளும் தாமதமாவதற்கான சாத்திக்கூறுகளே காணப்படுவதாகவும் தெரிவித்தார்.

முல்லைத்தீவு - கொக்குத்தொடுவாய் மனிதப் புதைகுழியின் அகழ்வாய்வு நடவடிக்கைகள் கடந்த மாதம் செப்ரெம்பர் (06) ஆரம்பிக்கப்பட்டு செப்ரெம்பர் (15) வரை அகழ்வாய்வுகள் இடம் பெற்றிருந்தது.

இவ் அகழ்வு பணியில் 17 எலும்புக்கூட்டு தொகுதிகள் மீட்கப்பட்ட நிலையில் குறித்த அகழ்வுப் பணியானது இடைநிறுத்தி வைக்கப்பட்டு ஒக்டோபர் மாதம் மூன்றாம் வாரமளவில் இதே குழுவினரால் மீள ஆரம்பிக்கப்படும் என முல்லைத்தீவு சட்டவைத்திய அதிகாரி கனகசபாபதி வாசுதேவா ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-7)

# நல்லின வளர்ப்பு நாய்க்கு இரு தரப்பினர் உரிமைகோரல்

## பரம்பரையை இனங்காண மரபணு சோதனை செய்ய நீதிமன்றம் உத்தரவு

நல்லின (பொமேரியன்) வளர்ப்பு நாய்க்கு இரு தரப்பினர்கள் உரிமை கோருவதனால், அதன் பரம்பரையின் மரபணுவை பரிசோதனை செய்து அறிக்கையிடுமாறு கிளிநொச்சி நீதவான் நீதிமன்று கட்டளையிட்டுள்ளது.

நாயை கடத்தி வைத்திருப்பதாக குற்றஞ்சாட்டப்பட்டவர் சார்பில் முன்வைக்கப்பட்ட விண்ணப்பத்துக்கு அமைய இந்த உத்தரவை நீதிமன்றம் வழங்கியது.

கிளிநொச்சியில் உள்ள குடியிருப்பாளர் வழங்கிய முறைப்பாட்டின் அடிப்படையில் வளர்ப்பு நாயை கடத்தி கட்டிவைத்து பராமரித்ததாக அயலவர் மீது கிளிநொச்சி நீதவான் நீதிமன்றில் பொலிஸார் வழக்குத் தொடர்ந்தனர்.

குற்றஞ்சாட்டவர் சார்பில் அவரது சட்டத்தரணியினால் பின்வருமாறு மன்றில் சமர்ப்பணம் செய்யப்பட்டது.

"இந்த வழக்குடன் தொடர்புடைய நாயை குற்றஞ்சாட்டப்பட்டவரே வளர்த்து வந்தார். கடந்த சில வருடங்களுக்கு முன் அயல் வீட்டில் உள்ள அதே இன நாயுடன் இன விருத்திக்காக சேர்க்கப்பட்டது.

அதன் பின் சில நாள்களில் குற்றஞ்சாட்டப்பட்டவரது வளர்ப்பு நாயைக் காணவில்லை. இந்த நிலையிலேயே கடந்த சில தினங்களுக்கு அவரது நாய் வீடு தேடி வந்துள்ளது.

அதன் பின் ஆராய்ந்த போது. அயலவர் குறித்த நாயை வேறு ஒரு இடத்தில் வசிக்கும் தனது மகளின் வீட்டுக்கு அழைத்து சென்று வளர்த்துள்ளனர். அவரது மகள் தூரப் பயணம் சென்றதனால் குறித்த நாயை சில நாட்களுக்கு முன் அழைத்து வந்து பெற்றோரின் வீட்டில் விட்டுச் சென்றுள்ளார்.

அதனாலேயே தன்னை வளர்த்தவர் வீட்டுக்கு நாய் மீண்டும் வந்துள்ளது. அதனையே அயலவர் தனது நாய் என்று உரிமை கோருகிறார்.

இந்த நாயின் பரம்பரையுள்ள பெண் நாய் ஒன்று தற்போதும் உள்ளது. அதனது மரபணுவையும் இந்த நாயினது மரபணுவையும் பரிசோதனை செய்ய கட்டளையாக்க வேண்டும்" என்று சமர்ப்பணத்தில் சட்டத்தரணி முன்வைத்தார்.

அதனை ஆராய்ந்த மன்று கிளிநொச்சி மாவட்ட விலங்கியல் மருத்துவ அதிகாரி ஊடாக இரண்டு நாய்களது மரபணுவை பரிசோதனை செய்து அறிக்கையிடுமாறு கட்டளையிட்டது. (ம-7,33)

# தேய்பிறை அட்டமி

(யாழ்ப்பாணம்)

தலையாழி ஸ்ரீ ஞான வைரவர் ஆலய தேய்பிறை அட்டமி உற்சவமானது இன்று மாலை 4.30 மணியளவில் இடம் பெறவுள்ளது.

இவ் உற்சவம் தனில் ஞான வைரவப் பெருமானுக்கு விஷேட அபிஷேகங்கள் இடம்பெற்றதை தொடர்ந்து மண்டபப் பூஜையுடன் சகஸ்ரநாம அர்ச்சனையும் நெய்விளக்கேற்றலும் இடம்பெறும். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை சனிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** மணியந்தோட்டம் ஐஸ் தொழிற்சாலை, நெபாட் வலைத் தொழிற்சாலை, உயர் தொழிநுட்பவியல் கல்வி நிறுவனம் - குருநகர், கட்டட திணைக்களம் - கடற்கரை வீதி, ஏ.வி. வீதி, கொழும்புத்துறை, கடற்கரை வீதி - பழைய பூங்கா வீதி, கொழும்புத்துறை - நெடுங்குளம் வீதி, சுவாமியார் சந்தி, டேவிட் வீதி, கடற்கரை வீதி - குருநகர், மணியந்தோட்டம், பாசையூர் [illegible] உதயபுரம் ஆலடி - காரைநகர், கோவலம் - காரைநகர், மருதபுரம் - காரைநகர், முல்லை வைரவர் கோவிலடி- பண்டத்தரிப்பு, காரை நகர் தபால் அலுவலகம் அருகில், பண்டத்தரிப்பு, சிவகாமி அம்மன் கோவிலடி - காரைநகர், வலந்தலை - காரை நகர், வியாவில் கருங்காலி ஆகிய இடங்களிலும் கிளிநொச்சி பிரதேசத்தில் அம்பகாமம், அம்பகாமம் மொபிட்டல் கோபுரம், டயலொக் கோபுரம் - ஒலுமடு, கற்கிடங்கு, நீதிபுரம், ஒலுமடு, பழம் வேலி வயல் வீதி, பெரிய புளியங்குளம் (தட்சை அடம்பன்), புலிமெச்சினாதிகுளம், புதியநகர் (தட்சை அடம்பன்), தட்சை அடம்பன் (கரிப்பட்டமுறிப்பு) ஆகிய இடங்களிலும் வவுனியா பிரதேசத்தில் எல்லாப்பர் மருதங்குளம், ஆச்சி புரம், ஆசிக்குளம், கற்குளம் (சிதம் பரபுரம்), கூமரசங்குளம் மாதா கோவிலடி, கோவில் குளம் 10 ஆம் ஒழுங்கை, மதுரநகர் கல்நாட்டின குளம், பெரிய கூமரசங்குளம், சமணங்குளம், சிதம்பர புரம், பூ - ஓயா, ஈரப்பெரியகுளம் இராணுவ முகாம் - குருந்துபிட்டிய, தேசிய இளைஞர் பயிற்சி முகாம், அழகல்ல (தீருவேகம), ஈரற்பெரிய குளம் பொலிஸ் நிலையத்தடி, ஈரப்பெரியகுளம், கல்குண்டாமடு, பகல அளுத்வத்த, புபுதுகம, வேரகம, அளுத்கம, RDW கல்லுடைக்கும் ஆலை ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** அந்தோனிப் பிள்ளை ஐஸ் தொழிற்சாலை, கூல் மென் ஐஸ் தொழிற்சால்ல, பெரியகரைசல் பல்மெய்ரா ஹவுஸ், பல்மெய்ரா ஹவுஸ் - தலைமன்னார், தலைமன்னார் வைத்தியசாலை, தலைமன்னார் கடற்படை முகாம், வங்காலைப்பாடு சென்ட் லார்ட் ஐஸ் தொழிற்சாலை, நடுக்குடா, பேசாலை - ஐஸ் தொழிற்சாலை, Grotto of lady lords church பேசாலை, கட்டுங்காரங் குடியிருப்பு, கரைசல் திட்டம், கீழியங்குடியிருப்பு, குருசுபாடு கடற்படை முகாம், படப்பாடி நீர் வழங்கல், பருத்திப்பண்ணை, பாவிலுப்பட்டான் குடியிருப்பு, பெரியகரைசல், பேசாலை, சிலாவத்தை முகாம் சந்தி, சிறுதோப்பு, தலைமன்னார், தலைமன்னார் கப்பல் வீடமைப்பு திட்டம், தலைமன்னார் புகையிரத நிலையம், துள்ளுகுடியிருப்பு தும்பு தொழிற்சாலை, துள்ளுகுடியிருப்பு திட்டம், வங்காலைப்பாடு ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை நாணயத்தின் வரலாறும் அரசியலும்
## பொலநறுவை யுகத்திற்குப்பின் கண்டி இராச்சியத்தின் வீழ்ச்சி வரை - பகுதி II

04

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.



### ஸ்ரீசங்கபோதிவம்சம் கம்பளை இராசதானி (கி.பி1341 - 1415)

கி.பி 1341 இல் 4ஆம் புவனேகபாகு (5ம் விஜயபாகுவின் மகன்) அரசன் கம்பளையை தலை நகரமாக்கி ஆட்சிக்கு வந்தான். அக்காலத்தில் அவரது சகோதரரான 5 ஆம் பராக்கிரமபாகு கேகாலை மாவட்டத்தில் டெடிகமையில் இருந்து ஆட்சி நடத்தினார். இதனால் ஒரு இராசதானிக்கு இரண்டு அரசர்கள் காணப்பட்டார்கள். இக்காலத்தில் பிரபுக்கள் பரம்பரையைச் சேர்ந்த அழகேஸ்வரன் என்ற பெயருடையவர் களுத்துறை மாவட்டத்திலுள்ள ரைகமவில் பலமுடையவராகக் காணப்பட்டார்.

கம்பளை அரச குடும்பத்துடன் தொடர்புடைய இன்னொரு பிரபுக்கள் குடும்பம் சேனாலங்காதிகார செனவிரத் எனக் குறிப்பிடலாம்.

கம்பளையின் ஒவ்வொரு அரசனும் அரச பதவிக்கு நியமனம் பெறும் முன்பு "யுவராஜா" என்ற பதவியை வகித்தனர். 4ஆம் புவனேகபாகு அரசனுக்கு சேனாலங்காதிகார செனவிரத் என்ற பெயரில் பிரபலமான அமைச்சர் ஒருவன் இருந்தான். 4ஆம் புவனேக பாகுவின் பின் 5 ஆம் பராக்கிரமபாகு கம்பளையின் அரசனானான்.

அவருடைய பிரதம அமைச்சராக சேனாலங்காதிகார செனவிரத் நியமிக்கப்பட்டதுடன் அவன் தெற்கில் சமய நிகழ்வுகளை நடத்தி பராக்கிரமபாகு மன்னனுக்கும் உதவியாக இருந்தான்.

கி.பி 1358 இல் விக்கிரமபாகு (புவனேகபாகுIV இன் மகன்) எனும் இளவரசன் நிஸங்க அழகக்கோனாரின் உதவியுடன் கிளர்ச்சியை ஏற்படுத்தி கம்பளை சிம்மாசனத்தைக் கைப்பற்றி 3 ஆம் விக்கிரமபாகு என்ற பெயரில் அரசனானான். இக் கிளர்ச்சிக்கு வடக்கின் ஆரியச் சக்கரவர்த்தியும் உதவியதாகக் கூறப்படுகிறது. 3 ஆம் விக்கிரமபாகு அரசனுடைய பிரதம அமைச்சராக விளங்கிய சேனாலங்காதிகாரவை அகற்றி விட்டு நிஸங்க அழகக் கோனாரை அப்பதவிக்கு நியமித்துக் கொண்டான். பிரதமஅமைச்சராகி குறுகிய காலத்துக்குள்ளேயே நாட்டின் அரசியலைக் கொண்டு நடத்தும் ஒருவராக நிஸங்க அழகக் கோனார் காணப்பட்டார்.

யாழ்ப்பாண ஆட்சியாளரான ஆரியச்சக்கரவர்த்தி மன்னார் தொடக்கம் பாணந்துறை வரை யானதுறை முகங்களில்வரி அறவிடும் உரிமையைத் தனதாக்கிக் கொண்டான். இதனால் ஸ்ரீஜயவர்தன புரவில் கோட்டையை அமைத்த அழகக்கோனார் ஆரியச்சக்கரவர்த்தியைத் தோற்கடித்து மேற்கின்துறை முகங்களைத்தன தாக்கிக் கொண்டான். தப்பியோடிய ஆரியச் சக்கரவர்த்தி மீண்டும் கம்பளையைத் தாக்கினார். வெற்றிரகமாக இவற்றுக்கு முகம் கொடுத்த அழகக் கோனார் ஆரியச் சக்கரவர்த்தியை மீண்டும் தோற்கடித்தான்.

5ஆம்புவனேகபாகுவின் பின் கி.பி 1391 இல் 2 ஆம் வீரபாகு (ஐந்தாம் புவனேகபாகுவின் மைத்துனர்) கம்பளையின் அரசனானான். அத்துடன் வீர அழகேஸ்வர என்பவன ரைகமவின் அரசனானான். வீரபாகு வீர அழகேஸ்வரனை தமக்குக் கீழ் கொண்டு வருவதற்காக முயற்சித்தபோது அழகேஸ்வரன் தோல்வியடைந்து இந்தியாவிற்குத் தப்பியோடினான். அதன் பின்னர் மீண்டும் இந்தியாவின் உதவியுடன் வீரபாகுவைத் தோற்கடித்து ரைகமவின் அரசனானான்.

### இரண்டாம் வீரபாகுஆட்சிக்கால செப்பு மோசா நாணயங்கள்

இருப்பினும் வீர அழகேஸ்வரனின் ஆட்சியை ஏற்றுக் கொள்வதற்கு கம்பளை சேனாலங்காதிகார தளபதி உட்படப் பலர் விரும்பாமையினால் சேனாலங்காதிரவின் பேரனாகிய பராக்கிரம ஏப்பாவை கம்பளை அரசனாக்கியதாக அஸ்கிரிய ஓலைச் சுவடியில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

இவ்வாறு கம்பளை, ரைகம என்று இரண்டு ஆட்சியாளர்கள் இருந்த காலத்தில் சீனப் பேரரசன் இலங்கையின் அரசியல் நடவடிக்கையில் தலையீடு செய்துள்ளான். சீனாவின் யுங்லோ பேரரசனால் அனுப்பப்பட்ட செங்ஹோசேனாதிபதி கி.பி1405 இல் இலங்கையை வந்தடைந்தான். இவன் அரசனுக்கு ஏனைய பிரதானிகளுக்கும், வணக்கஸ் தலங்களுக்கும் காணிக்கைகள் கொண்டு வந்தான். ரைகம ஆட்சியாளனான அழகேஸ்வர இவனை மகழ்ச்சியுடன் வரவேற்றான். சீனத்தளபதி கொண்டு வந்த காணிக்கைகளை தெவுந்தரை தேவாலயத்திற் சமர்ப்பித்து விட்டுத் திரும்பிச் சென்றான். கி.பி 1411 இல் செங்ஹோ தளபதி பெரும்படையுடன் மீளவும் இலங்கைக்கு வந்தான். இவனுடன் சண்டையிட வீர அழகேஸ்வர ஆயத்தமாயினான். செங்ஹோ தளபதி வீர அழகேஸ்வரனைத் தோற்கடித்து அவனைக் கைது செய்து சீனாவுக்குக் கொண்டு சென்றான்.

இரண்டாம் வீரபாகு ஆட்சிக் காலத்தில் இருந்த செப்பு மோசா நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந் நாணயத்தின் முன் பக்கத்தில் நிற்கும் திமில் உள்ள காளை பின்பக்கத்தில் எழுந்து நிற்கும் அரசன் ஆகிய உருவங்களைக் கொண்டுள்ளன. இந்நாணயங்களின் விட்டங்கள் வேறுபட்டு காணப்படுகின்றன.

### ஸ்ரீசங்கபோதிவம்சம் கோட்டைஇராச்சியம் (கி.பி1412-1597)

ஸ்ரீஜயவர்த்தனபுரக் கோட்டையை மைய நிலையமாகக் கொண்டு அரசாட்சி நடைபெற்றதே கோட்டே அரசு அல்லது கோட்டே இராசதானி. இது கி.பி. 15 நூற்றாண்டுக் காலப் பகுதியில் இலங்கையில் சீராக ஆட்சி நடை பெற்ற அரசாகும். கோட்டை இராச்சியத்தின் சிறந்த ஆட்சியாளனாக 6ஆம் பராக்கிரமபாகு விளங்குகின்றான். கி.பி 1412 தொடக்கம் 1467 வரை 55 வருடங்கள் ஆட்சி செய்த 6 ஆம் பராக்கிரமபாகு முழு இலங்கையையும் ஐக்கியப்படுத்தி ஒரு குடையின் கீழ் ஆட்சி செய்த இறுதி மன்னனாவான்.

மேற்குக் கடற் பகுதியிலிருந்து வந்த படையெடுப்பாளர்களின் தாக்குதல்களை முறியடிக்க, மூன்றாவது விக்கிரமபாகு அரசனின் ஆட்சிக் காலத்தில் கம்பளை அரசின் அமைச்சர் அழகேசுவரன் (1370-1385) மூலம்கட்டப்பட்ட இந்தப் பாதுகாப்புக் கோட்டை, பின்னர் அதாவது 1412 இல் ஆறாவது பராக்கிரமபாகு மன்னன் மூலம் தலைநகராகக் கொள்ளப்பட்டது. இப்பகுதியைச் சுற்றியுள்ள சதுப்பு நிலம் மூலம் இது மிகவும் பாதுகாப்பாக அமைந்திருந்தது.

### ஆறாம்பராக்கிரமபாகு (கி.பி1412-1467)

ஆறாம்பராக்கிரமபாகு (1410/ 1412/1415- 1467) கோட்டை அரசை ஆண்டதிறன் மிக்க ஒரு மன்னன் ஆவான். இவன் அரசனாகிய பொழுது பல நூற்றாண்டுகளாகப் பலவீன முற்றிருந்த சிங்கள இராச்சியம் மீண்டும் வலுப்பெற்றது. சிங்கள இலக்கியத்தில் மறு மலர்ச்சி ஏற்பட்ட காலமாக இவன் காலம் சொல்லப்படுகின்றது.

சீமான் ஜயமகாலேனன் மற்றும் சுனேத்திரா மகாதேவிக்கு மகனாகப் பிறந்த இவனது அரச பதவியின் அதிகாரபூர்வம், உரிமை எதுவும் தெளிவாக அறிய முடியவில்லை. அவன் ஐந்தாம் பராக்கிரமபாகுவின் கொடி வழியில் வந்தவன் என்ற கருது கோள் பல ஆய்வாளர்களால் முன்வைக்கப்படுகின்றது. ஆரம்பத்தில் கம்பளை இராசதானியிலிருந்து மூன்றாண்டுகள் ஆண்ட இவன், 1415இல் ஆட்சிக்கு வந்ததுடன், சுவர்ண மாணிக்கதேவி அல்லது ரண் மெனிக்கேயை பட்ட மகிஷியாகக் கொண்டிருந்தான்.

ஆறாம் பராக்கிரமபாகு ஆட்சிக் காலத்தில் இருந்த செப்பு மோசா நாணயங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. அந் நாணயத்தின் முன் பக்கத்தில் எழுந்து நிற்கும் அரசன் பின்பக்கத்தில் உட்கார்ந்திருக்கும் அரசனும் நாகரி எழுத்தில் பெயர் சிறீ பராக்கிரமபாகு என்றும் உள்ளன. இந்நாணயத்தின் விட்டம் 20.32 மி.மீ.

### ஆறாம் பராக்கிரமபாகு ஆட்சிக்கால செப்பு மோசா நாணயங்கள்

மலை நாட்டில் உருவான கிளர்ச்சிகளை வெற்றிகரமாக அடக்கிய பராக்கிரமபாகு, விஜயநகரப் பேரரசு 1435 இல் இலங்கை மீது மேற்கொண்ட படையெடுப்பையும் தடுத்து நிறுத்தியதாக சொல்லப்படுகின்றது. 1445 களில் தமிழகக் கரையோர நகரங்கள் மீதும் இவன் படையெடுத்ததாக சிங்கள நூல்கள் புகழ்கின்றன. இவனது வளர்ப்பு மகன் செண்பகப் பெருமாளால் யாழ்ப்பாண அரசு வெற்றிகரமாகக் கைக் கொள்ளப்பட்டதும் புகழ்ந்து பாடப்பட்டிருக்கின்றது. இவனால் கோட்டையில் ஒரு அரண்மனையும், மூன்றடுக்கு கொண்ட தலதா மாளிகையும் அமைக்கப்பட்டது.

### இரண்டாம் ஜெயபாகு (கி.பி1467-1469)

கி.பி 1467 இல் மன்னர் ஆறாம் பராக்கிரமபாகு இறந்த போது, அவரது மகளின் மகன் இளவரசர் ஜெயபாகு இரண்டாம் ஜெயபாகு என்ற பெயரில் கோட்டேயின் அரசரானார். அவருக்கு அரசாட்சி இல்லாததால் கோபமடைந்த யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளரான இளவரசர் சப்புமல் கோட்டேவுக்கு வந்து மன்னன் இரண்டாம் ஜெயபாகுவைக் கொன்று கி.பி1469 இல் கோட்டையின் ஆட்சியை ஆறாம் புவனேகபாகுவாக ஏற்றுக் கொண்டார். (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி ரணிலின்...

ருந்தது.

இருப்பினும் இந்த சீனக் கப்பல் இலங்கைக்கு வருவதற்கு இன்னும் அனுமதி வழங்கப்படவில்லை என வெளிவிவகார அமைச்சு அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## மனித உரிமை...

வெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்று யாழ் இலங்கை மனித உரிமை ஆணைக் குழு அலுவலகம் முன்பாக நடைபெறவுள்ளது.

கவனயீர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு கோரிக்கைக்கு வலுச் சேர்க்குமாறு சட்டத்திற்கும் மனித உரிமைக்குமான நிலையம் தெரிவித்துள்ளது. (ம-7,30)

## கொழும்பில்...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த தகவலின் அடிப்படையில் உடனடியாக உத்தியோகபூர்வ அறிக்கையை நீதிமன்றில் சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதவான் பசன் அமரசேன நேற்று முன்தினம் பயங்கரவாத விசாரணைப் பிரிவிற்கு உத்தரவிட்டதாக தென்னிலங்கை ஊடகம் ஒன்று பரபரப்பு செய்தியை வெளியிட்டுள்ளது.

பயங்கரவாத விசாரணைப் பிரிவின் பணிப்பாளரினால் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட தகவல் அறிக்கையை பரிசீலித்த மேலதிக நீதவான் இந்த உத்தரவை பிறப்பித்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நீதிமன்றில் இருந்து சிறைச் சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட கைதி ஒருவரால் பேருந்தின் ஜன்னலுக்கு வெளியே வீசப்பட்ட மரத்துண்டு ஒன்றின் மூலம் இந்தத் தாக்குதல் தொடர்பிலான அடிப்படைத் தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் குறித்த ஊடகம் சுட்டிக்காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## ஜனாதிபதி...

உச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக எதிர்வரும் 16ஆம் திகதி ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சீனாவிற்கு பயணிக்கவுள்ளார்.

குறித்த விஜயத்தின்போது சீன ஜனாதிபதி Xi Jinping உள்ளிட்ட பல்வேறு தலைவர்களை சந்தித்து கலந்துரையாடவுள்ளார்.

சீனாவிடமிருந்து கடன் நிவாரணத்தைப் பெறுவதில் இலங்கை சவால்களை எதிர்கொண்டுள்ளதாக சில தகவல்கள் தெரிவிக்கின்ற போதிலும் இருதரப்புக் கடனை மறுசீரமைக்கும் பொறிமுறை குறித்து சீன ஜனாதிபதி Xi Jinping உடன் கலந்துரையாடல்கள் முன்னெடுக்கவுள்ளதாக ஜனாதிபதி அலுவலகத்தின் பேச்சாளர் உறுதிப்படுத்தியுள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் சீன விஜயத்தின்போது கடன் நிவாரணம் தொடர்பில் கணிசமான முன்னேற்றம் ஏற்படும் என எதிர்பார்ப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க பதவியேற்ற பின்னர் சீனாவிற்கு மேற்கொள்ளும் முதலாவது விஜயம் இதுவாகும். (ம-7)

## யாழ். - சென்னை...

சாணக்கியன் படகு சேவை தொடர்பில் எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளித்தபோதே அமைச்சர் இதனைக் கூறினார்.

இதன்போது, காங்கேசன்துறை துறைமுகத்தில் 600 மில்லியன் ரூபாய் பெறுமதியான அபிவிருத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் கப்பல் சேவையை ஒன்று அல்லது இரண்டு வாரங்களில் ஆரம்பிக்க முடியும் என இந்திய உயர்ஸ்தானிகர் கோபால் பாக்லே வாக்குறுதி வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

மேலும் தலைமன்னார் - இராமேஸ்வரம் கப்பல் சேவை தொடர்பான நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளது.

தலைமன்னாரில் ஏற்கனவே காணப்பட்ட இறங்குதுறை உபகரணங்கள் மற்றும் பகுதிகள் அழிவடைந்துள்ளன. அவை திருத்தப்பட வேண்டும்.

தேவையான உபகரணங்கள் தற்போது அங்கு கொண்டு செல்லப்படுகின்றன. சுமார் ஆறு மாதங்களில் அந்த நடவடிக்கைகளை நிவர்த்தி செய்ய முடியும். இந்த திட்டத்திற்காக எதிர்வரும் வரவு செலவுத் திட்டத்தின் மூலம் 600 மில்லியன் ரூபாவை பெற்றுக் கொள்வதற்கான யோசனையை முன்வைத்துள்ளேன்.

அத்துடன் எதிர்வரும் 16ஆம் திகதி நான் இந்தியாவுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளேன். அங்கு கப்பல் துறை அதிகார சபை உள்ளிட்ட அதிகாரிகளுடன் அது தொடர்பில் பேச்சுவார்த்தை நடத்துவேன். இந்த கப்பல் சேவையை நடத்துவதில் அங்குள்ள தரப்பினரும் தயாராக வேண்டியுள்ளது அந்த நடவடிக்கைகள் முடிவுற்றதும் இந்த கப்பல் சேவையை ஆரம்பிக்க முடியும் என்றார். (ம-7)

## பொருட்களின்...

துள்ள மத்திய வங்கியின் ஆளுநர் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளும் அதற்கு சமாந்திரமாக இடம்பெறும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

கடன்மறுசீரமைப்பு தொடர்பில் இந்தியா, பாரிஸ் கிளப், சீனா ஆகிய நாடுகள் பெரும் ஆதரவை வழங்கியுள்ளன எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில விடயங்களிற்கு தீர்வை கண்டதும் பணியாளர் மட்ட உடன்பாடு சாத்தியமாகலாம் எனவும் அவர் மேலும் தெரிவித் துள்ளார். (ம-7)

## மாணவர்...

பரிதாபகரமானது என உளவியலாளர் கலாநிதி கிஹான் அபேவர்தன தெரிவித்தார்.

ஹெரோயின் போதைப்பொருள் பாவனையாளர்கள் ஏனைய போதைப்பொருள் பழக்கத்திற்கு அதிக நாட்டத்தைக் காட்டுகின்றனர்.

இதனால் அவர்களின் நிலைமை இன்னும் ஆபத்தானதாக மாறுகிறது என்று வைத்தியர் அபேவர்தன எச்சரித்தார். (ம-7)

## உயர்...

முல்லைத்தீவு நீதிபதி சரவண ராஜாவின் பதவி விலகலுக்கு நீதி கோரியும் ஜன நாயகத்தில் கை வைக்க வேண்டாம் என வலியுறுத்தியும் கொழும்பில் சட்டத்தரணிகள் நேற்று கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

உயர் நீதிமன்றத்திற்கு முன்பாக கவனயீர்ப்பு போராட்டத்தில் ஈடுபட்ட சட்டத்தரணிகள்வாழைத்தோட்டம்பொலிஸ் நிலையம் வழியாக பேரணியொன்றை முன்னெடுத்து மீண்டும் உயர் நீதிமன்றத்திற்கு முன்பாக கூடி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை முல்லைத்தீவு மாவட்ட சட்டத்தரணிகள் நேற்று 4 ஆவது நாளாகவும் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

முல்லைத்தீவு நீதிபதி பதவி விலகிய விவகாரத்தில் நீதி வழங்குமாறு கோரி இந்த பணிப்பகிஷ்கரிப்பு முன்னெடுக்கப்படுகின்றது. (ம-7)

## வட கிழக்கில்...

முல்லைத்தீவு நீதிபதி விவகாரம் தொடர்பாக அடுத்த கட்டமாக எவ்வாறான நடவடிக்கைகளை முன்னெடுப்பது என்பது குறித்து தமிழ்த் தேசிய கட்சிகள் ஒன்றுகூடி ஆராய்ந்திருந்தது.

அதன்படி அடுத்த கட்ட போராட்டமாக ஹர்த்தலை அறிவிப்போம் என சிலர் கருத்து தெரிவித்த போதிலும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை.

அனைத்து தரப்பினருடனும் கலந்துரையாடிய பின் ஹர்த்தால் நடவடிக்கை தொடர்பில் முடிவு எடுக்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

தன நிதானய
திகதி - 2023.10.05
சீட்டிழுப்பு இலக்கம் - 1288
S 06 08 13 53 S
42157

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3500
சீட்டிழுப்பு திகதி 05.10.2023
L 42 48 61 74
L 31569
தேசிய லொத்தர் சபை

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.10.05
சீட்டிழுப்பு இலக்கம் 567
மேஷம் 10 12 29 59 மேஷம்

மஹஜன சம்பத
திகதி 2023/10/05
சீட்டிழுப்பு இலக்கம் 5258
W 7 6 3 6 0 7

மெகா பவர்
திகதி 05/10/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1606
F 20 27 44 68 77
15039

லக்கி 7
திகதி 05.10.2023
சீட்டிழுப்பு இலக்கம் 0084
L7 இலக்கம் 3 5
வெற்றி இலக்கினம் கன்னி
வெற்றி இலக்கங்கள் 3 6 8 7 1 5

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2232 வர்ணம் பச்சை
சீட்டிழுப்பு திகதி 2023.10.05 தினம் வியாழக்கிழமை
04 17 53 71 N
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 70,611,988.40

சனிதா
திகதி 2023.10.05 வெற்றி வாரம் 4393 வர்ணம் சிவப்பு
11 16 39 68 J
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,646,824.00
52950

ராசி
சீட்டிழுப்பு வாரம் 3944 வர்ணம் வியாழக்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.10.05 தினம் கபிலம்
07 15 19 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 5,603,260/-
477348 953

கப்ருக
திகதி 05.10.2023 வெற்றி வாரம் 1408
T 28 03 05 23 45
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 448,247,624.20
621296 789
DLB தொலை பேசி: 011-2 333 540-47 Web: www.dlb.lk

உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 634 திகதி 2023-10-05 வர்ணம் நீலம்
H 21 29 65 05
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 12,012,640.00
DLB DEVELOPMENT LOTTERIES தொ. பே.: 0112 333 540/47 Web: www.dlb.lk

வியாழக்கிழமை
வெற்றி வாரம்: 2058
சீட்டிழுப்பு திகதி: 2023.10.05
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 59,455,920/-
ADA KOTIPATHI
19 27 35 55 C
240970

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சந்தர்ப்பத்தை தவறவிடாதீர்கள்

முல்லைத்தீவு, கிளிநொச்சி, பூநகரி, பளை பிரதேசங்களில் வாழ் மக்கள் தங்களிடமுள்ள பழுதடைந்த விவசாய, மின்சாதன, ப்வர்ரூல்ஸ், கொங்கிறீற் மிக்சர், றமர் மற்றும் சிறு கைத்தொழில் இயந்திரங்கள் அனைத்தையும் நாளை சனிக்கிழமை **(07.10.2023) இலவசமாக பழுது பார்த்து தருவதோடு இச் சேவை ஒவ்வொரு மாதத்தின் முதல் சனிக்கிழமைகளிலும் இடம்பெறும் மேலும்** எம்மிடமுள்ள அனைத்து விற்பனை சாதனங்களின் விலைகளையும் நினைக்க முடியாத விலைக்கழிவுடன் பேரம் பேசி பெற்றுக்கொள்ளலாம்.

வாருங்கள் பாருங்கள் வாங்கிச் செல்லுங்கள் (17336)

ஆர்க் என்ரபிறைசஸ் 021 228 2020 | A9, வீதி, பரந்தன் சந்தி. 071 535 7800



**KBK** கணக்கீட்டுக் கல்லூரி - யாழ்ப்பாணம்
கந்தர்மடம் கொழும்புத்துறை

தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம்

## கணக்கீடு

**திரு.க.பா.பாலகஜன் SLTS**
B.Com(Jaf), H.N.Dip-in-Acc(ATI), Dip-in-Edu(OUSL), M.Com(Hons)Acc.Spl

புதிய பிரிவுகள் ஆரம்பம்

A/L 2023 துரித மீட்டல் வகுப்பு (Seminar)
A/L 2024 புதிய தேர்ச்சிகள்
A/L 2025 ஆரம்பத்திலிருந்து
(17352)

- பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள் நேரடியாகவும் Zoom இன் ஊடாகவும் நடைபெறுகின்றது.
- தவணைப் பரீட்சையில் குறைவான புள்ளிகளைப் பெறும் மாணவர்களுக்கு மேலதிக வகுப்புக்கள்

சாதித்தவர்களை கேளுங்கள்....
சாதனைக்கான வழியினை.....

- 077 452 0043


# நியூசிலாந்து வெற்றி




2023 உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டித் தொடரின் முதல் போட்டியில் நியூசிலாந்து அணி வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பாட்டம் செய்த இங்கிலாந்து அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் முடிவில் 9 விக்கெட் இழப்புக்கு 282 ரன்கள் எடுத்தது.

வெற்றி இலக்கை துரத்திய நியூ சிலாந்து அணி 36 ஓவர்கள் 02 பந்துகளில் 283 ஓட்டங்களைப் பெற்று ஒரு விக்கெட்டை மாத்திரம் இழந்து வெற்றி பெற்றது.

டெவோன் கான்வே 152 ரன்களும், ரச்சின் ரவீந்திரன் 123 ரன்களும் எடுத்து நியூசிலாந்தை வெற்றிக்கு அழைத்துச் சென்றனர்.

உலகக் கோப்பைப் போட்டியில் சதம் அடித்த நியூசிலாந்துஅணியின்இளம் வீரர் என்ற சாதனையில் ரச்சின் ரவீந்திர இணைந்துள்ளார். (ம-7)


அமெரிக்க இலவச லொத்தர் விசா - 2023

நீங்களும் அமெரிக்காவில் வாழலாம்!!

ஆரம்பம் : 05-10-2023
முடிவு : 07-11-2023

- 18 வயதிற்கு மேற்பட்ட யாரும் தனியாக விண்ணப்பிக்கலாம்.
- குடும்பத்தினருக்கு இரண்டு வாய்ப்புக்கள்.
- இலங்கையின் எப்பாகத்தில் இருந்தும் எமக்கூடாக விண்ணப்பிக்கலாம்.
- Passport தேவையில்லை
- எமது அனைத்து கிளைகளிலும் விண்ணப்பிக்கலாம்.

(C-7386)

V2 TRAVELS 0768226241 0768226240



## பணியாளர்கள் தேவை

கிளிநொச்சி திருவையாற்றில் இயங்கி வரும் SK அறிவுச்சோலை சிறுவர்அபிவிருத்தி நிலையத்திற்கு கீழ்வரும் பணியாளர்கள் தேவைப்படுகின்றார்கள்.

**01.பராமரிப்பாளர் - ஆண்**
1.வயது - 30-55 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2.தகைமை - க.பொ.த(உ/த) பரீட்சைக்கு தோற்றியவராக இருத்தல் வேண்டும்.
3.உடல் உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

**02.பராமரிப்பாளர் - பெண்**
1.வயது - 30-55 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.
2.தகைமை - க.பொ.த(உ/த) பரீட்சைக்கு தோற்றியவராக இருத்தல் வேண்டும்.
3.உடல் உள ஆரோக்கியமுள்ளவராக இருத்தல் வேண்டும்.

சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும். (C-7385)

021 228 3313, 074 176 5901



VILLAGE HOTEL
JAFFNA EXPRESS
பஸ் சேவை

AIRPORT PICK UP DROP SERVICE



யாழ் - கொழும்பு 2,900/=
வடமராட்சி - கொழும்பு 2,700/=
(17019)

T.P: 077 544 8503



அலுவலக வேலை - பயிற்சி

2 மாத கால பயிற்சியுடன் உடனடி வேலைவாய்ப்பு



*நீங்கள் A/L எடுத்துவிட்டு மேற்படிப்புக்காக / வேலைக்காக காத்திருப்பவரா?
*இதோ! 2 மாத கால அலுவலக வேலையுடனான பயிற்சி நெறி
*பயிற்சி முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்
(C-7386)

சம்பளம் - 60,000/- (2 மாதம்)

V2 TRAVELS - 0777-068-777



## கொழும்பு விலையில்

**யாழ்ப்பாணத்தில் கோழிகள் மலிவாக பெற்றுக்கொள்ள முடியும்**

33 வருடகால பூர்த்தியை முன்னிட்டு மலிவாக கோழிகள், முட்டைகள் தொகையாய் இவைகள் அனைத்தும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.



- 24 மணிநேர சேவை(இரவு, பகல்)
- சுகாதார முறைப்படி சுத்தம் செய்து தரப்படும்.
- கோழி வியாபாரிகளுக்கும் ஹொட்டல் தேவைகளுக்கும் விசேட விலைக்கழிவு உண்டு.
- புறோயிலர் - 1Kg - 650/= சுத்தம் செய்யப்பட்டது - 1000/= மொத்தமாக 900/=
- கல்பேட், பேரன்ஸ் 1Kg - 750/= சுத்தம் செய்யப்பட்டது - 1100/= மொத்தமாக 1000/=
- மொத்தமாக கொள்வனவு செய்பவர்களுக்கு யாழ் மாவட்டம் முழுவதும் ரான்ஸ்போட் இலவசம்

தொடர்பு (17351)

நியூ சிற்றி கோழிப் பண்ணை
நியூ சிற்றி கோழிக்கடை
இல.08, சின்னக்கடை, மீன் மாக்கெற், குருநகர், யாழ்ப்பாணம்.



## தென்னிந்திய யாத்திரை

தமிழ்நாடு, ஆந்திரா, கேரளா, கர்நாடகா, பாண்டிச்சேரியுடனான யாத்திரை

ஆரம்பம் : 13.11.2023 | யாத்திரிகர் : 10 | நாட்கள் : 16

**தரிசிக்கும் இடங்கள்** : உச்சிப்பிள்ளையார், மதுரை மீனாட்சி சுந்தரேஸ்வரர், திருப்பதி, ஸ்ரீரெங்கம், சமயபுரம் பிரம்மாகோயில், இராமேஸ்வரம், பழனி, திருத்தணி, திருப்பரம்குன்றம், திருச்செந்தூர், சிதம்பரம், ஏகாம்பரேஸ்வரர், காலகஸ்தி, திருவெண்ணாமலை, சுவாமிமலை, பழமுதிர்ச்சோலை, திருவெண்ணைக்காவல், மேல்மருவத்தூர், தஞ்சாவூர், நவபாஷாணம், சூரியன், சந்திரன், சுக்கிரன், புதன், வியாழபகவான், செவ்வாய், ராகு, கேது, சனி பகவான், திருநள்ளாறு, நளன்குளத்தில் நீராடல், தோணியப்பர், குருவாயூர், மைசூர், சாமுண்டீஸ்வரி, நந்திகோவில், கன்னியாக்குமாரி, சுசீந்திரம், மனக்குழ விநாயகர், திருக்கடையூர் பஞ்சவடி பிள்ளையார், பட்டி விநாயகர், வடபழனி முருகன் உட்பட 60 இற்கும் குறையாத ஆலயங்களைத் தரிசிப்பதுடன் மெரீனாபீச், பாண்டிச்சேரி பீச், MGR, ஜெயலலிதா, அண்ணா சாமதிகளையும் மைசூர் பாலஸ், பிருந்தாவனம் காடின், அப்துல் கலாமின் மணிமண்டபமும் பார்க்கலாம்.

**தங்களிடம் பெற்றுக்கொள்ளும் ரூபாவுக்கு எமது சேவை** : இருவழி விமான ரிக்கட், மூன்று வேளை சுத்தமான சைவ உணவு, குடிநீர் 2 பேருக்கு கட்டில் மெத்தை, குளியலறை இணைந்த அறைகள், AC வாகன வசதி, கொழும்பில் இருந்து ஏயர்போட் போகவும் வருவும் வாகன வசதி இவை அனைத்தும் எமது சேவை.

**மேலும் விவரங்களைக் கேட்டு அறிந்து பதிவு செய்யவும் சகல ஆலயங்களும் பூசை நேரத்தில் தரிசிக்கலாம்.(இத்துடன் யாழ் - கொழும்பு போக வர வாகன வசதி செய்து தரப்படும்.)**

**"வந்தவரை கேளுங்கள் சென்றுவரலாம் வாருங்கள்"**

**சீரடி பாபா தரிசனம் திருப்பதி**

**ஆரம்பம் 20.12.2023 நாட்கள் 06 சீரடி பாபா 03 நாள் சனி சிங்கனபூர் திருப்பதி Vip தரிசனம் சென்னையில் 1 நாள் சொப்பிங்** (17331)

தொடர்புகளுக்கு : கலாநிதி T.ஸ்ரீரெங்கநாதன் மகன்: ராஜன்
59, 3/6, செட்டியார் தெரு, கொழும்பு - 11.
sriranganathan1944@gmail.com, sriranganathan2601@gmail.com
077 768 0102, 077 736 2154



## புதிய குருவின் வரவேற்பும் முதல் நன்றித் திருப்பலியும்



### அருட்பணி கிறேஷியன் றெமோஷன் அடிகளார் (அ.ம.தி)

05.10.2023ஆம் திகதியன்று யாழ்.மறை மாவட்ட ஆயர்தந்தை பேரருட்திரு **ஜஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம்** ஆண்டகை அவர்களினால் புதிய குருவாக திருநிலைப் படுத்தப்பட்ட எம் மண்ணின் மைந்தன் அருட்பணி **கிறேஷியன் றெமோஷன் (அ.ம.தி.)** அடிகளாருக்கு எமது மனம் நிறைந்த வாழ்த்துக்களைச் சாற்றுகின்றோம்.

புதிய குருமணி தனது முதல் நன்றித் திருப் பலியை நாளை 07.10.2023 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு **இளவாலை புனித யூதாததேயு** ஆலயத்தில் ஒப்புக்கொடுக்க வுள்ளார். புதிய குருவிற்கான வரவேற்பு வைபவம் அன்றைய தினம் காலை 8.00 மணிக்கு இளவாலைச் சந்தியில் இருந்து ஆரம்பமாகும் என்பதனை அன்புடன் அறியத் தருகின்றோம்.

இறைவனின் மாட்சிமிகு பணிக்கு இறை யழைப்புபெற்ற புதிய குருவுடன் இணைந்து நாமும் இறைவனுக்கு நன்றி செலுத்தி குருமணியை அன்புடன் வரவேற்று மகிழ் கின்றோம்.

சென்யூட், இளவாலை (17330)

பங்குத்தந்தையும் பங்குமக்களும்
புனித யூதாததேயு ஆலயம்,
இளவாலை.


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ... முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.10.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org